புத்தர் வரலாறு

ஆசிரியர் :

எம். இ. வீரபாகு பிள்ளை பி. ஏ., எல். டி.

★

ஒற்றுமை நிலையம்

தியாகராயநகர் :: மதராஸ்.

பதிப்புரிமை] 1952 [விலை அணா 8.

Approved by
the Madras Text Book Committee

கோல்டன் பிரஸ், 2/50, தாணு தெரு, சென்னை-7.

முகவுரை

உலகில் ஜீவகாருண்யம் என்னும் பேரறத்தை நிலை நாட்டிய உத்தமர் புத்த பகவானுடைய வாழ்க்கை வரலாறு அனைத்தும் இந்நூலில் தெளிவாக உள்ளது. உயர்ந்த துறவு நிலை எளிதில் விளங்கக் கூடிய வகையில் இஃது அமைக்கப்பட்டுள்ளது. பள்ளியில் பயிலும் இளம் பருவத்திலேயே மாணாக்கர்க்கு புத்தருடைய அருட் கொள்கை அமைவது மிகவும் நன்மையாகும். ஆதலால், அவர் வரலாற்றை விளக்கமாகவும் சுருக்கமாகவும் வரையவேண்டும் என்பது எமது விருப்பம். வரலாறு முழுவதும் செய்யுள் நடையில் அமைந்த சரித்திர நூலினை அடிப்படையாகக் கொண்டு எழுதியதாகும். இந்நூலை அச்சிடுங்கால் உதவிய வித்துவான் M. C. கண்ணபிரான் முதலியார் அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக.

தியாகராயநகர்.

எம். இ. வீரபாகு

24-3-47.

Q4:3
N52

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	தோற்றுவாய்	... 1
2.	கலைப்பயிற்சி	... 9
3.	உலகின் துன்பம் உணர்தல்	... 13
4.	திருமணம்	... 15
5.	கனவு காணுதல்	... 17
6.	நகரத்துன்பறிதல்	... 19
7.	சித்தார்த்தர் துறவு	... 26
8.	உண்மை வினுதல்	... 30
9.	மகனை இழந்த தாயின் மனம் தேறச் செய்தல்	... 32
10.	உயிர் அருள் விரித்தல்	... 35
11,	புத்தராதல்	... 38
12.	கபிலைக்கு மீளுதல்	... 43
13.	கடமை வகுத்தது	... 51
14.	புத்தருடைய சிறந்த கொள்கைகள்	... 52

புத்தர் வரலாறு

1. தோற்றுவாய்

நமது இந்திய தேசத்தின் வட வெல்லையாக விளங்குவது இமயமலையே. உலகில் எங்கும் அதைவிட உயர்மலை இல்லை என்னும்படி உயர்ந்து திகழும் அம்மலையின் அடிவாரத்தில் பல ஆறுகள் தோன்றி ஓடுகின்றன. அவற்றுள், 'பாவங்களைக் கழுவிப் புண்ணியத்தைக் கொடுக்கும்' என்று மக்கள் புகழ்ந்து கூறிச் சென்று முழுகி வரும் கங்காநதியே சிறந்தது. அந்நதியின் கிளை நதியான உரோகணி என்னும் ஆறு மிகவும் அழகுடையது. அந்நதிக் கரையில் கபிலை என்னும் பெரும்பதி ஒன்று உண்டு. அது எல்லா வளமும் ஒருங்கே பொருந்தப் பெற்றது. உயிர்களுக்கெல்லாம் அமுதம் போல எல்லா நலங்களையும் கொடுப்பதான உரோகணி நதியே அந்நகரின் சிறப்புக்குக் காரணமாய் இருந்தது. அந்நகரில் சற்றேறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே சுத்தோதனன் என்னும் அரசன் செங்கோல் செலுத்தி வந்தான்.

அம்மன்னனுடைய பட்டத்தரசியாகிய மனைவியின் பெயர் மாயை என்பது. அவளிடம் மன்னன் அளவிறந்த அன்புகொண்டு வாழ்ந்து வந்தான். தன்னுட்டில் வாழும் குடி மக்களிடமும் மிகுந்த அன்புடையவனுய் அவர்கள் மகிழும்படி நன்முறையில்

காத்து வந்தான். மன்னனுக்கு எல்லாச் செல்வங்களும் இனிதின் நிறைந்து இருந்தன. ஆனால், மக்கட்பேறு ஒன்று மட்டும் இல்லாமல் இருந்தது. மக்களைப் பெறாத வர்களுக்கு வேறு எச்செல்வங்கள் இருந்தும் என்ன பயன்? சுத்தோதனன் தனக்குப் பிள்ளை இல்லையே என்பதை எண்ணிப் பெரிதும் மனம் வருந்துவான்.

மன்னன் மனக்கவலை :

ஒரு நாள் சுத்தோதனன் தன் மனைவியை நோக்கி, 'பெண்ணே, மழலை மொழி பேசி, மகிழ்வினை அளிக் கும் மக்களைப் பெறாத வாழ்க்கை மகிழ்ச்சி அற்றதே ஆகும். மனைக்கு அணிகலன் மக்களே ஆவார் அல்லவா? நான் மன்னரில் சிறந்தாலென்ன? வண்மையில் மிகுந்தா லென்ன? பொன்னினைக் குவித்தாலென்ன? புகழ்தனை விளைத்தாலென்ன? புத்திரனோ நமக்கில்லை. மக்கள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்தில் இன்பம் ஏது? மறு மையில் தான் இன்பம் உண்டா? இல்லை. என்ன செய்வேன். இறைவன் திருவருள் என்னிடம் அமைய வில்லையே' என்று கூறி வருத்தப்பட்டான்.

அதைக் கேட்ட மாயை மனம் வருந்தி, கண்களில் நீர் ஒழுக, 'நாதா, பழைய வினையைப் போக்க வல்லார் யார்? விதியை விலக்குவோர் உண்டா? இதைப்பற்றி எனக்குப் பல நாட்களாக வருத்தம் உண்டு. ஆனால், "கடவுள் திருவருளால் இனியாவது ஒரு மகன் பிறப்பான்" என்ற நம்பிக்கையால் தேறுதல் அடைகிறேன்' என்று கூறினாள். 'அரசன் கேட்டுச் சிரித்து அவ்வாறு கிடைத்தால் நான் அதிர்ஷ்டசாலி தான்' என்றான்.

கனவு கண்டு களிப்படைதல்:

இவ்வாறு மன்னனும் அவன் மனைவியும் வருத்தத்தோடு வாழும் நாளில், மாயை ஒரு நாள் கனவொன்று கண்டாள். மாயை உடனே தன் கணவனிடம்சென்று, 'இரவு அறுகோண வடிவமுள்ள நட்சத்திரம் ஒன்று என் வயிற்றில் வந்து புகுந்தது, அதன் ஒளியோ சொல்ல முடியாது. என் கண்களும் கூசின. அஃது என்னிடம் நெருங்கி வரவர எனக்கு அதிசயமும் ஆனந்தமும் அதிகரித்தன. வயிற்றில் புகுந்ததும் உறக்கம் நீங்கி எழுந்தேன்' என்று கூறினாள்.

அதைக் கேட்ட அரசன் அதிசயமும் அக மகிழ்ச்சியும் கொண்டான். பிறகு தன் மனைவியை நோக்கி, 'பெண்ணே, உன் நம்பிக்கை நிறைவேறலாம். கனவு கனவே ஆய்விடுமா? கனவு நனவு ஆகும். கடவுள் கருணை நம்மீது ஏதோ சிறிது பட்டிருக்கிறது. கண்ணே, இதோ பார், தோட்டத்திலிருந்து நல்ல மணம் வந்து வீசுகிறது. அது நற்குறியே. மனக் கவலை நீங்க மகனைப் பெறுவாய். கனவு நல்ல பயனைத் தரும். தடை ஒன்றும் நேராது. என் மனம் முன்னிருந்ததை விட மகிழ்ச்சி பொங்கி வளர்கிறது. உன் மனத்துயர் நீங்கச் சோதிடனை அழைத்துக் கனவின் பயனை அறிந்து உரைக்குமாறு செய்கிறேன்' என்றான்.

கனவின் பயன் காணுதல்:

உடனே அரசன் நல்ல சோதிடன் ஒருவனை அழைத்துக் கனவின் பயனைக் கூறுமாறு கட்டளை இட்டான். 'உற்றது கொண்டு மேல் வந்து உறு

பொருள் உணர்ந்து உரைக்க வல்ல' சோதிடன், 'அரசரே, கனவின் பயன் நன்மை தீமை இரண்டும் கலந்து காண்கிறது. இராணியார் கண்ட கனவால் பெறுதற்கரிய பெரும் பேற்றைப் பெறக்கூடும். மனக் கவலையை மாற்றத்தக்க மகன் பிறப்பான். மாயை என்னும் தங்கள் பட்டத்தரசியார் இன்னும் சில நாளில், ஒரு தெய்வக்குழவியைக் கர்ப்பங்கொண்டு ஈன்றளிப்பார் கள் என்பதில் ஐயமில்லை. அருளே உருவாம் அருமைப் புதல்வராகிய அக்குழவி உங்கள் துயரை நீக்கும்' என்று கூறி வாளா இருந்தான்.

சோதிடன் கூறியதைக் கேட்டதும் மன்னன் மனம் மகிழ்ந்து, "கனவின் பயன் நன்மையும் தீமையும் கலந்து தோன்றுகிறது என்று கூறினையே. தீமையாது? ஏன் அதைச் சொல்லாமல் நிறுத்திவிட்டாய், அதைக் கூறு" என்று கேட்டான். அதற்கு அவன் உண்மை யைச் சொல்லித் தீரவேண்டியதாய் இருந்தது. அரசன் ஆணையை மறுத்து மறைக்கக்கூடாது. ஆகையால், 'அரசரே, பிறக்கும் மகன் சிறந்த மன்னனாய் மண் அனைத்தும் அன்போடு அன்னைபோல் ஆண்டாலும் ஆளுவான். மன்னுயிர் அனைத்துக்கும் நன்னெறி காட்டுமோர் ஞானியாய் உலகமெங்கும் புகழ் பரப்பி அருளை நிலை நாட்டினும் நாட்டுவான். இந்த இரண்டில் ஏதேனும் ஒரு வழியில் செல்லக்கூடும். எவ்வாறாயினும் மகன் தோன்றுவான் என்பது உண்மை' என்று கூறிச் சென்றான்.

புத்தர் தோற்றம் :

சோதிடன் கூறியபடியே சில நாள் சென்றதும் மாயை என்னும் மன்னன் மனைவி கர்ப்பவதியானாள்.

மாதம் பத்துக் கடந்தவுடன் அம்மங்கை நல்லாள் நல்ல தினத்தில் ஆண் குழந்தை ஒன்றைப் பயந்தெடுத்தாள். பிறந்த குழந்தை, அன்பு, அருள் கொடை முறை ஆகிய அருங்குணம் அனைத்தும் வடிவுகொண்டு வந்ததுபோல விளங்கியது. ஆண் மகன் பிறந்தான் என்பதைக் கேட்டதும் அரசன் களிப்பென்னும் கள்ளுண்டு உவகைக் கடலுள் மூழ்கினன் குடிமக்கள் எல்லோருக்கும் குழந்தை பிறந்த நற்செய்தியை அறிவிக்குமாறு ஆணை பிறப்பித்தான். மக்கள் அனைவரும் மனம் பூரித்து மகிழ்ச்சி மேலிட்டனர். மன்னர் மகன் பிறந்த நன்னாளை ஒரு விழாவாகக் கொண்டாடிப் பாராட்டினர். பலவகைப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு வந்து காணிக்கையாகச் செலுத்தி அரசிளங் குமாரனைக் கண்டனர்.

பெயர் இடுதல்:

சுத்தோதனனுக்குச் சிறந்த நன்னாளில் சிறுவன் தோன்றினன் என்பதை அறிந்த முனிவரும் பெரியோரும் மன்னன் மனைக்கு வந்து வாழ்த்தினர். அப்போது, மன்னன் தன் காதல் சிறுவனுக்குச் சித்தார்த்தன், சர்வார்த்த சித்தி என்னும் பெயர்களைச் சூட்டி உள்ளம் பொங்கினன். குடி மக்கள் அனைவரும் 'கௌதமக் குலத்தை விளக்க வந்த விளக்கே' என்று போற்றியதால் கௌதமர் என்றும் அழைத்தனர்.

அசித முனிவர் ஆசி கூறல்:

சித்தார்த்தரைக் காணவந்திருந்த முனிவர் பலரைப் போல், அசித முனிவரும் இளங் குமரனைக் காண

வந்தார். மன்னவன் அவரைக் கண்டதும் வணங்கிச் செய்யவேண்டிய உபசாரங்கள் எல்லாம் புரிந்து தனது செல்வக் குமரனை வாழ்த்துமாறு வேண்டினன். முனிவர் புன்னகை புரிந்து மன்னனை நோக்கி, 'மன்னு, நான் இவ்வழியே வந்துகொண்டிருந்தேன். உனக்கு மகன் பிறந்ததைக் கேட்டதும் என் உள்ளத்தில் ஒரு வித உணர்ச்சி தோன்றியது. உடனே நேரே கண்டு செல்லும் விருப்பங் கொண்டு வந்தேன். இங்கு வந்து நின்றதும் என்னை மறந்த நிலையில் இருக்கிறேன். ஏதோ காரணம் தெரியவில்லை. இங்கு யாரோ ஒரு மகான் இருக்கவேண்டும்' என்று கூறிக் குழவியைப் போய்க் கண்டார். கண்டதும், அவர் உடம்பெல்லாம் மயிர் கூச் செறிந்தது. கண்களில் களிப்பு நீர் ததும்பியது. சிறிது நேரம் தம் நினைவின்றி நின்றார். அதைக் கண்ட அரசன் அஞ்சி வணங்கிய வண்ணமாய் முனிவர் முகத்தை நோக்கி நின்றான்.

சித்தார்த்தர் சிறப்பு:

'மன்னு, இந்த அருமந்த செல்வனை அடைவதற்கு நீ பெரும் புண்ணியம் செய்திருக்கவேண்டும். என்னைப் போன்ற தவசிகள் தவங்கள் எல்லாம் கூடினாலும் உன்னுடைய பெருமைக் கீடாகாது. ஞானிகளுக்கு இல்லாத பெரிய நல்லிலக்கணங்கள் இந்த நம்பியின் மெய்யிலும் முகத்திலும் திகழ்கின்றன. என் தீவினை யாவும் இத்தெய்வீகக் குழந்தையைக் கண்டவுடன் காற்றில் பட்ட பஞ்சு போல் பறந்தொழிந்தன' என்று முனிவர் இயம்பிக் குழந்தையின் கால்களில் தம் முடியை வைத்து வணங்கினார். அதைக் கண்ட அரசன் முனிவர் கூறியதைக்

கேட்டு வியப்படைந்ததோடு பின்னும் அதிகமாக வியப்பும் திகைப்பும் கொண்டான்.

அசிதமுனிவர் அரசனை நோக்கி, 'வேந்தே, உலகில் உயிர்கள் நல்வழியில் நடந்து நற்கதி பெற அவ்வப் போது பெரியோர் அவதரிப்பர். இப்போது இவ்வுலகம் இத்தேவரால் புதுப்பிக்கப்படப் போகிறது ; இவ்வுலக இறப்பு முதலாகவுள்ள துன்பங்கள் யாவும் ஒழியப் போகிறது. இவர் சொல்மாரியால் உயிர்களாகிய பயிர் கள் தழைத்தோங்கப் போகின்றன. உன் பெயரும் குலப்பெயரும் உலகமெங்கும் பரவி நிலைக்கும். ஆனால், இவரைப் பெற்ற தாய் இன்னும் ஏழு நாட்களில் இறந்து போவாள். உலகமெல்லாம் புகழப் போகும் உத்தமனைப் பெற்றாய்; உள்ளம் மிகவும் மகிழ்ந்தாய். ஆனால், இவரால் இனி உனக்கு அணுவளவும் நன்மை இல்லை. துன்பமே மிகுதியாகும்' என்று கூறி அரச னிடம் விடைபெற்றுச் சென்றார்.

மாயை மரித்தலும் மன்னன் வருந்துதலும் :

முனிவர், மாயை மரிப்பாள் என்றபோதே மன்னன் மனத்தில் துன்பம் என்னும் பயிர் தோன்றிற்று. பிறந்த தன் மகனால் துன்பம் விளையுமேயன்றி இன்பம் இல்லை என்பதை எண்ணி எண்ணி ஏக்கமுறத் தொடங்கினான். ஏழு நாள் சென்றதும் முனிவர் சொல்லியவாறே மாயை இன்னுயிரை நீத்தாள். அதைக் கண்ட அரசன் மட் டற்ற மனத்துயர முற்றான் ; என்ன செய்வான் பாவம். இளங் குழந்தையை எப்படிக் காப்பாற்ற முடியும். பெற்ற தாயாருக்கன்றோ பிள்ளையின் அருமைதெரியும்? மன்னனும் மக்கட் பேறு இல்லாமல் இருந்து பெற்றவ

ணுயினும் அந்த அருமை அறிந்து காப்பார் யார் என்று வருத்தப்பட்டான். பிறகு, மகனை வளர்ப்புத்தாய் ஒருத்தியிடம் ஒப்புவித்தான்.

மாண்ட தன் மனைவியை மன்னர் வரிசைக் கேற்ற முறையில் அடக்கஞ் செய்தற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு மந்திரிக்குச் சொன்னான் மன்னன். அவ்வாறே எல்லா ஏற்பாடும் செய்து மந்திரி முதலானவர் மாயை உடலை அடக்கம் செய்தனர். உருவைப் பிரியாத நிழல்போலத் தன் நினைவை விட்டு நீங்காத மனைவியின் பிரிவு பற்றிய வருத்தம் மன்னன் மனத்தில் நிலைத்து நின்றது.

2. கலைப் பயிற்சி

சித்தார்த்தர் செவிலித் தாய்மார்களால் மிக்க அன்போடு வளர்க்கப்பட்டார். ஐந்து வயது நிறைந்தவுடன் முறைப்படி கல்வி கற்பிக்க எண்ணி விசுவாமித்திரர் என்பவரை ஆசிரியர் ஆக்கினான் அரசன். விசுவாமித்திரர் சிறுவருக்கு எழுத்தும் சொல்லும் இசை முதலிய எல்லாக் கலைகளையும் கற்பித்தார். சித்தார்த்தரும் பழைய பாடம்போல் எல்லாக் கலைகளையும் எளிதில் உணர்ந்தார். ஆசிரியர் சொற்படி நடப்பார். நாள் தோறும் செய்ய வேண்டியவைகளைச் செய்தே தீர்ப்பார். ஆசிரியர் சொல் என்றால் முன்னாள் சொல்லிய அனைத்தையும் சொல்வார். கற்கும் கல்வியோடு வேறு கலைகளையும் அறிவார். ஆனால் கற்றதை ஒரு நாளும் மறவார்.

சித்தார்த்தர் அரச குமாரர் ஆதலால் யானை ஏற்றம் குதிரை ஏற்றம் முதலியனவும் அரசர்க்கு வேண்டிய படைக்கலப் பயிற்சி பிறவும் ஒப்பாரும் மிக்காரும் இல்லையாம்படி எளிதில் கற்றறிந்தார். இவரிடம் கல்வியோடு கருணையும் சாந்தமும் அன்பும் ஆகிய நற்குணம் பலவும் பெருகி வளர்ந்தன.

நற்குணமும் நற்செயலும் :

சித்தார்த்தர் பேசும் ஒவ்வொரு சொல்லும் கேட்பதற்கு அமுதம் போன்றிருந்தது. அவர் மனம் கருணைக்குரிய கோயிலாக விளங்கியது. அவர் பார்வையில் தயையும் அன்பும் கலந்து தோன்றின. அவர் எப்போதும் பிறர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார். ஓய்ந்த நேரங்களில் எல்லாம் உலக இன்பம் அடைவதற்குரிய வழி வகை எவை என்பதை ஆராய்

வார். இவையே அன்றி அரசகுமாரர் செய்யவேண்டிய வேட்டையாடுதல் முதலிய தொழிலைச் செய்ய மனம் விரும்பார். தம்முயிர் போவதா யிருந்தாலும் ஒருயிரைக் கொல்லுதல் பாவம் என்று வேட்டைத் தொழிலை மன தில் எண்ணவுமாட்டார்.

ஒரு நாள் குதிரைப் பந்தயத்தில் கலந்து கொள்ளு மாறு பிறர் வேண்ட, சித்தார்த்தரும் அவர்கள் விருப் பத்திற்கிணங்கித் தாமும் ஒரு குதிரைமீதேறிச் சவாரி செய்தார். தம் குதிரை இளைத்து விடுமே என்று எண் ணிப் பக்கத்தில் ஓடும் குதிரைகளுக்கு முன்னே செல்ல வேண்டும் என்று விரைந்து ஓட்டாமல் பந்தயத்தில் தோற்றுவிட்டார். போகவேண்டிய தூரம் நெருங்கி னாலும் மற்றவர் மனம் துன்பம் அடையுமே யென் றெண்ணி முன்னே செல்லாமல் பின்னே நிற்பார். இத் தகைய பரந்த எண்ணம் இவருடைய இளம்பருவத்தி லேயே எழுந்து வளர்ந்தது.

இக்காலத்தில் சிறுவர்கள் விளையாடும்போது வெற்றி பெற்றுவிட்டால் தோற்ற நண்பர் மனம் வருந்தக் கைதட்டி ஆரவாரம் செய்து மனப் புண் உண் டாக்குவதை நாம் அறிவோம் அல்லவா? இதனைச் சித்தார்த்தர் சிறு வயதில் கொண்ட சிறந்த குணத் தோடு ஒப்பிட முடியுமா? அவர் நற்பண்புகளோடு நற்செயலும் அமைந்தவர்.

அன்னப்பறவையிடம் அருள் காட்டியது:

ஒரு நாள் சித்தார்த்தர் தம் மாமனோடு பரந்த வெளியில் மகிழ்ச்சியோடு உலாவச் சென்றார். அப் போது வெள்ளைச் சிறகுள்ள அன்னப் பறவை பல

ஒன்று கூடி ஆகாயத்தே பறந்து சென்றன. அவற்றைக் கண்ட மாமன் அன்னப் பறவை ஒன்றை அம்பு விட்டு அம்புவியில் விழச் செய்தான். கீழே விழுந்த அன்னப் பறவை உயிர் துடித்து வருந்தியது. அதைக் கண்ட சித்தார்த்தர் தாமும் துயர்கொண்டு அன்னப் பறவையின் அருகே ஓடினார். அளப்பதற்கரிய அருளால் இரு கைகளாலும் விரைந் தெடுத்துப் பாவியாகிய தம் மாமன் எய்த அம்பை முன்னே எடுத்தெறிந்தார். அன்பு மேலீட்டால் அன்னப் பறவையின் தலை, கால், வால் முதலிய உறுப்புக்களைத் துடைத்து வயிற்றில் சேர்த்து அணைத்து எடுத்து வந்தார்; பாலும் சோறும் கொடுத்தார்; அன்னப் பறவை களைப்பு நீங்கிச் சித்தார்த்தரை நோக்கிற்று.

அன்னப் பறவை அம்புக்கு இரையாகாமல் உயிர் தாங்கிக் கண் திறந்து பார்க்கவே சித்தார்த்தர் மனமகிழ்ந்து இந்தப் பால் சோற்றால் அல்லவா இந்த அன்னப் பறவை பிழைத்தது. நான் பெரும் பேற்றைப் பெற்றேன். இனி இதை அதன் போக்கில் விட்டுவிட வேண்டும். அதுவே நாம் செய்யவேண்டுவது என்று மனத்துள் நினைத்தார். அன்னப் பறவையின் நோயை நீக்கிய புண்ணியர் பாலும் சோறும் தந்து களைப்பைப் போக்கிய புருஷோத்தமர் பால் சோறு அன்னத்தைக் காத்தது என்று தம் மனத்துள் எண்ணியதே அவருடைய தேவப் பிறப்பைக் காட்டுகிறதல்லவா?

மாமன் வழக்குத் தொடுத்தல்:

இத்தகைய சீலரிடம் மாறான குணங்கொண்ட மாமன் "அன்னம் என்னுடையது, என்னிடம் கொடு" என்று வழக்கிட்டான். அரசிளங்குமார

ராகிய சித்தார்த்தர் தம் மாமனுக்குத் தாமே பதில் கூறுதல் தகாதென் றெண்ணி ஆங்கு வயது முதிர்ந்த அறிஞர் ஒருவரிடம் சென்று வழக்கை முறையிட்டார். எப்போதும், எவ்வளவுதான் அறிவுடையவர்களாய் இருந்தாலும் தம் வழக்கைக் குறித்துப் பிறர் கூறுவது தான் பொருத்தமாகும். முறையானதாகத் தெரிந் தாலும் மூர்க்கனுக்குக் கூறினல் அவன் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டான் அல்லவா? வழக்குத் தொடுப்பது பெரியோர்க்கு இழுக்குத் தருவது என்று எண்ணினல், மூடன் மொழிவதையே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் பெரியோர் இயல்புக்குப் பொருத்தமானது. ஆனல், சித்தார்த்தரும் வம்பாக வழக்காடும் மாமனிடம் எதிர்த்து வாதிக்காமல் வழக் குத் தொடராமல் விட்டிருக்கலாம். அன்னப்பறவையி னிடத்தில் தாம் கொண்ட அன்பின் மிகுதியால் எவ்வாருயினும் அதன் உயிரைக் காக்கவேண்டியது கடமை என்றெண்ணி அறிஞரிடம் சென்று வழக்கிட அழைத்துச் சென்றார்.

வழக்கின் முடிவு கூறல்:

வழக்கைக் கேட்ட முதியோர், 'அன்னப் பறவை இறந்திருந்தால் அஃது அம்பு எய்து வீழ்த்தியவர்க்கு உரியதாகும். உயிர் பிழைத்திடச் செய்தபின், பிழைத்து விட்டதால் அன்னப்பறவை சித்தார்த்தர்க்கே உரிய தாம். இதுவே என் முடிவு என்று தீர்ப்புக் கூறினர், உடனே உயிர்களுக்கு எல்லாம் தாய்போன்ற சித்தார்த் தர், உள்ளம் மகிழ்ந்து பறவையை அதன் விருப்பப்படி பரந்த வெளியில் பறந்து செல்ல விட்டார். பறவை பறந்து போய்த் தன் இனத்தை அடைந்தது.

3. உலகின் துன்பம் உணர்தல்

இயற்கைவளங் காண ஏகுதல் :

ஒருநாள் காவலன், தன் கண்ணிற் சிறந்த காதல ராகிய சித்தார்த்தரை அழைத்து, 'அப்பா, கலைகள் பல கற்றாலும், அரசாளும் அவனி வேந்தர்க்கு உலகியல் அறிவு வேண்டும்.

'உலகத்தோ(டு) ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்' அதாவது

பலகலை ஞானம் வல்லவராயினும் உலக நடையோடு ஒத்துவாழ உணராதவர் அறிவில்லாதவரே ஆவார். ஆகையால் மன்னுயிர் காக்கும் மன்னன் ஆவதற்குரிய நீ உலக நடத்தையை உணர்தல் வேண்டும். ஆகை யால், நாம் இப்போது வெளியே சென்று வருவோம், வா' என்றழைத்துச் சென்றான்.

தந்தையும் தனயனும் எங்கே சென்றார்கள்? அரசன் ஆட்சிக்கு அடிப்படையான உழவரைக் காணச் சென்றார்கள். குடி, படை, உணவு, அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறும் அரசர்க்குரியன. அவற் றுள் உணவே உயர்வானது. அவ்வுணவைத் தரும் உழவரைக் காணவே மன்னனும் மகனும் சென்றார்கள்.

அங்கே, உழவர் தங்கள் தங்கள் வயலில் ஏரில் கட்டிய மாடுகளைக் கூரிய முள்ளுடைய தாற்றுக் கோலால் குருதி ஒழுகக் குத்தி ஓட்டிக்கொண்டிருந் தனர். சேற்றில் புதைந்த கால்களை எடுக்க முயன்று முடியாமல் மாடுகள் தள்ளாடிக் கொண்டிருந்தன. வெயிலின் வெப்பம் மேலே தாக்க, கொடிய பசி உடலை

வருத்த உடம்பெல்லாம் வியர்வை ஒழுக வயலில் பலர் பல வேலைகள் செய்திருந்தனர். பலர் காலை முதல் பசியோடு தங்களுடைய வரம்பு வாய்க்கால் முதலியவற்றை மண் வெட்டியால் வெட்டிச் சீராக்கிக் களைப்புற்றனர். இவற்றையும் நாற்றுக்களைப் பிடுங்கி நடுவோர் வருத்தத்தையும், களை பறிப்போர் களைப்பை யும், அடிமைப்பட்டோர் அனுபவிக்கும் அளவில் அடங்காத பாட்டினையும் சித்தார்த்தர் தமது கண்ணாரக் கண்டார்.

பிறகு, ஆங்கே ஓருயிர் மற்றோர் உயிரைக் கொன்று தின்று மகிழ்வதையுங் கண்டார். இவ்வாறு உயிர்த்தொகைகள் பல வகையான துன்பங்களை அடைந்து வருந்துவதைக் கண்டு மனம் உருகினார். "ஐயோ, இந்த உயிர்க்கூட்டங்கள் ஏன் இவ்வாறு வருந்தவேண்டும். துன்பம் இல்லாமல் இன்பமே நிறைய ஏன் வாழ்தல் ஆகாது. இறைவன் இப்படி யுங் காலங்கழிக்க எண்ணிப் படைத்திருப்பாரா? இராது; இன்பமாய் வாழ ஏதேனும் வழி இருக்க வேண்டும். அதனை நாம் காணுதல் வேண்டும். அதுவே நாம் செய்யவேண்டிய பேருபகாரம் ஆகும்" என்று தம் மனத்தில் எண்ணி ஓரிடத்தில் அசை யாமல் உட்கார்ந்திருந்தார். பிறகு அரசனுடைய ஏவலாளர் அழைத்துச் செல்ல அரண்மனை சென் றடைந்தார்.

4. திருமணம்

மன்னன் சித்தார்த்தருக்குத் துன்பம் தோன்ருதபடி உபாயம் செய்தல் :

இவ்வாறு சித்தார்த்தர் ஜீவகாருண்யத்தில் சிந்தனை முழுவதையும் செலுத்தி, சிந்தித்திருப்பதைச் சுத்தோதனன் உணர்ந்தான். அசிதமுனிவர் கூறியதும் அவன் நினைவிற்கு வந்தது. அதனுல், அரசன் தன் அருமை மைந்தனை இல்லறத்தில் இருத்த எண்ணினுன். மன்னன் மந்திரிமார்களுடன் ஆலோசனை செய்து அவர்கள் கூறியவாறே மனமகிழ்ச்சியோடு காலங்கழிக்க ஏற்பாடு செய்தான். பல அழகிய மாளிகைகளைக் கட்டுவித்தான். நண்பர்கள் பலரோடு பழகி இருந்து மகிழ்ந்து பொழுது போக்குமாறு தன் மகனுக்கு ஆணை இட்டான்.

சித்தார்த்தரும் 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை' என்பதை அறிந்து தந்தையின் விருப்பப்படியே அன்பர் பலருடன் அந்த அழகிய மாளிகையில் வாழ்ந்து வருவாராயினுர். அப்போது உயிர்கள் படும் துன்பங்கள் அவர் கண்ணில் படாமற் போயின.

இவ்வாறு சிலநாள் சென்றன. உடனே மன்னன் தன் இளங்குமரருக்கு, நற்குணமும் நல்லியல்பும் உடைய யசோதரை என்னும் நங்கையை மணஞ் செய்வித்தான். மணமக்கள் இருவரும் மனங்கலந்தவராய் இல்லற வாழ்க்கையை இனிது நடத்தினர். கண்டோர் யாவரும் "காதலன் காதலி என்ருல் இவ்வாறன்ருே இருக்கவேண்டும்" என்று புகழ்ந்து கூறுவார் ஆயினர். ஆனுலும், வலியல்

கண்ட தொழிலாளிகளின் வருத்தமும், பறவை, விலங்கு முதலிய உயிர்களின் துன்பச் செயலும் சித்தார்த்தர் நெஞ்சை விட்டுச் சிறிது நேரமும் அகன்றபாடில்லை. உலகில் உயிர்களுக்கு நேரும் துன்பங்களை எண்ணும்போதெல்லாம் ஏக்கமுறுவார்.

முனிவர் கூறியபடி தன் அருமை மகன் "எப்போது பற்றற்ற துறவியாய் விடுவானோ" என்ற பயம் அரசன் மனத்திலிருந்து நீங்கவே இல்லை. மகன் துறவியாகாமல் இருக்க இன்பவாழ்வும் இல்லற வாழ்க்கையும் இனிது படைப்பித்தும் மன்னன் மனம் அமைதி அடையவில்லை. சித்தார்த்தர் கண்ணுக்குத் துன்பக் குறிகள் எவையும் தோன்ரு வண்ணம் பல ஏற்பாடுகளைச் செய்வித்தான்.

5. கனவு காணுதல்

மதனும் ரதியும்போல் சித்தார்த்தரும் யசோ தரையும் இல்லறத்தை இனிது நடத்திவரும் நாளில், யசோதரை கர்ப்பிணி ஆயினுள். பத்து மாதம் சென்றபின் பழங்குலம் விளங்கப் பாலன் ஒருவனைப் பயந்தெடுத்தாள். பெற்ற ஆண் மகவைத் தாய் பாராட் டிச் சீராட்டிப் பாதுகாத்து வந்தாள்.

சித்தார்த்தர் மகன் பிறந்தான் என்னும் மகிழ்ச்சி யால் மக்கள் பலருக்கும் பல தருமங்களைச் செய்தார். மகிழ்ந்த மனத்தோடு சித்தார்த்தர் தூங்கிக்கொண் டிருந்தார். அப்போது "உலகத்தில் உள்ள உயிர் களின் துன்பங்களை நீக்க வந்த நான், இப்படி இல்லறத் தில் ஈடுபட்டு இருக்கிறேனே" என்று கனவில் வாய் விட்டுக் கூறினர். உடனே, அவர் மனைவியார திடுக் கிட்டு எழுந்து அவரை எழுப்பி, "நாதா, என்ன கூறி னீர்; தீங்கேதேனும் உண்டா? முகம் ஏன் சோர்வுற் றிருக்கிறது" என்ருர். உடனே சித்தார்த்தர் உறக் கம் கலைந்து விரைந்தெழுந்து சோர்வைப் போக்கிப் புன்னகை புரிந்து "பெண்ணே, ஒன்றும் இல்லை" என்று பதில் கூறிப் பின் தோழியை அழைத்து வீணை வாசிக்கும்படி கூறினர்.

இளவரசர் கட்டளைப்படியே தோழி ஒருத்தி வீணை யின் இன்னெலியை இசைத்தாள். அந்த இன்னேசை யைச் செவியேற்றதும் சித்தார்த்தர் உள்ளத்தில் ஒரு நாள் இரவில் கனவில் தேவர்கள் வந்து வீணை ஒலிசெய் தது நினைவுக்கு வந்தது. கனவில் சொன்னதாவது :—

" அன்ப, உயிர் வாழ்க்கை காற்றுத் தென்றலாய் வாடை

யாய் எங்கும் சுற்றிச் சுழன்று ஓய்வதை ஒத்தது. நீ எங்கிருந்து இங்கு வந்தாய்? ஏன் இங்கே வந்தாய்? இவ்வுலக இன்பம் நிலையானதா? உயிர்கள் படும் துயரத்தை உணரவில்லையா? உலகில் உயிர்கள் அடையும் துன்பம் நீங்க உபாயங் காண இப்போதே புறப்படு. நன்னெறி கண்டு நற்கதி பெற வழி காண வெளிப்படு. நாங்கள் பழமையுடைய உலகில் சூழத் தோன்றும் வாயு ஆகையால் இதனை உனக்குத் தெரிவித்தோம். உன்னை அன்றி உயிர்கள் அழுத கண்ணும் சிந்திய நீரும் உடையவையாய் இருத்தலை உணர்வார் யார்? அறியாமையால் ஆழ்ந்து சிறிது நேரம் இருந்து மறையும் இன்பத்தைக் கண்டு மகிழுவோரைக் கண்டு நாங்கள் புன்முறுவல் செய்வோம். நீ தயங்காதே; புறப்படுக" என்பதாம். மனத்துயரை நீக்க மகிழ்ச்சி மிக்க வீணை ஒலிகேட்ட சித்தார்த்தருக்கு மேலும் மனச் சோர்வு உண்டாகியது. அதை அறிந்த தோழி குதிரையைப்பற்றி ஒரு கதை கூறினாள்.

அதனால், சித்தார்த்தர் ஒருவாறு சித்தம் தெளிந்து சிந்தனை மாறுபட்டார். குதிரை தன் இனத்தைச் சேர்ந்து வாழும் திறத்தைக் கூறியது அவர் மனத்தில் பட்டது. ஆனால், அஃது அவர் மனத்தில் சிறிது நேரமே இருந்தது.

6. நகரத் துன்பறிதல்

சித்தார்த்தர் அடிக்கடி தம்மை மறந்து சிந்தனையில் ஆழ்வார். வேடிக்கையாகப் பேசுவதையும் குறைத்தார். இவற்றை யெல்லாம் கண்ட யசோதரை கணவன் தன்னிடம் கொண்ட அன்பைக் குறைப்பதாக எண்ணி வருந்தினுள். ஆயினும் புத்தர் மனைவியிடத்தில் சிறிதும் அன்பைக் குறைத்தாரிலர்.

சித்தார்த்தர் நிலை சுத்தோதனனுக்கு மட்டும் வருத்தத்தை வளர்த்துக்கொண்டே வந்தது. சித்தார்த்தரை இல்லற வாழ்க்கையில் சேர்த்து வைத்து மகிழ்ந்த மகிழ்ச்சி ஏழு வருஷங்களில் நீங்கவேண்டியதாயிற்று. ஆனுலும் சுத்தோதனன் வாழ்க்கையில் எவ்வளவு இன்பமும் அழகும் தோன்றச் செய்யக் கூடுமோ அவ்வளவையும் புத்தருக்கு உண்டாக்கச் செய்தான். எப்போதும் விழிப்போடிருந்து புத்தருக்குத் துன்பம் முதலியன தோன்ருவண்ணம் செய்து வந்தான்.

ஒரு நாள் சித்தார்த்தர் தம் தந்தையாரைப் பார்த்து "பிதாவே, நான் இந்தப் பட்டணம் முழுவதையும் சுற்றிப் பார்க்கவேண்டும். எனக்குத் தயவு செய்து உத்தரவு கொடுங்கள்" என்ருர். அதைக் கேட்ட சுத்தோதனனுக்கு மகனை வெளியே அனுப்ப மனம் இல்லை. ஆயினும் மகனுடைய மன விருப்பத்தைத் தடை செய்ய மன மில்லாமல், "அப்பா, அப்படியே நாளைக்குச் சென்று விருப்பப்படி நகர் முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பி வா" என்ருன். பக்கத்தில் இருந்த வேலைக்காரர்களை அழைத்து "இளவரசர் நாளைக்கு இந் நகரைக் காண வருகிருர். ஆகையால், அப்போது

ஏழை, நோயாளர், குருடர், செவிடர், நொண்டி முதலியவரும் இறந்த மக்களுடைய உடலும் அவர் கண்ணில் படாதவண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள். துன்பத்திற்குரிய எவற்றையும் அவர் பார்க்கும்படி செய்தலாகாது. நகரத்தை நன்ருய் அலங்காரம் செய்யுங்கள். எல்லோரும் இனிய முகத்தோடு புத்தரை வரவேற்று உபசரித்தல் வேண்டும்" என்று கட்டளை யிட்டான். அரசன் இட்ட கட்டளைப்படியே அவர்கள் சென்று முன்னேற்பாடுகள் பலவற்றையும் செய்தனர்.

மறுநாள் சித்தார்த்தர் தேர் ஏறி நகர் காணச் சென்ருர். அவர் பார்க்குமிடம் எங்கும் இன்பமான காட்சியுடன் விளங்கின. வழியின் இரு மருங்கிலும் வளர்ந்த தாவரங்களின் பசுமையான காட்சி கௌதமர் கண்ணைக் கவர்ந்தது. இவ்வாறு இன்பங்களைக் கண்ட புத்தர் 'இவ்வுலகத்தில் மக்களோடு மற்றைய உயிர்களும் இன்பமாகவே காலங்கழிக்கின்றன' என்றெண்ணி மகிழ்ந்தார். ஆனல் அடுத்த நிமிடத்திலேயே மனம் வருந்தத்தக்க ஒரு காட்சியைக் கண்டார்.

முழுவதும் நரைத்த வயது மூத்த கிழவன் ஒருவன் காச நோய் கொண்டு ஓயாமல் இருமிக்கொண்டிருந்தான். இடைவிடாது இருமியவாறே இல்லந்தோறும் சென்று பிச்சை ஏற்று வருதலைப் பார்த்தார். உள்ளந் திடுக்கிட்டார். தேரின் முன்னே இருந்து தேரைச் செலுத்தும் பாகனைப் பார்த்து "இவனென்ன மானிடனே?" என்று கேட்டார். அதைக் கேட்ட பாகன் அரசிளங் குமரராகிய புத்தரை நோக்கி,

'வள்ளலே, இவனும் மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவனே. வயது முதிர்ந்ததனால் இவ்வாறு காணப்படுகிறான். இளம் பருவத்தில் மதன்போன்ற அழகும், முருகன் போன்ற வீரமும், விடைபோன்ற நடையும் உடையவனாக இருந்தான். முதுமையால் மூன்றாவது காலாக அந்தக் கோலைக் கொண்டு நடக்கிறான். முதுகு வளைந்து தோல் திரைத்து எலும்புக் கூடுபோல் இருக்கிறான்; மக்களுடைய முதுமைப் பருவத்தில் அவர் படும் பாட்டைக் கண்ணாற் காணவுங் கூடுமா? அந்தத் தொல்லையை என் வாயால் சொல்லவுங்கூடாது' என்றான்.

அதைக் கேட்ட சித்தார்த்தர் 'அப்பா, அப்படியானால் இந்த நோய் எனக்கும் என் மனைவி யசோதரைக்குங்கூட வருமோ?' என்று கேட்டார். அதற்குச் சாரதி, 'ஆம், அனைவருக்கும் வரும்; எண்பதாண்டளவு இருந்தால் உங்களுக்கும் இந்நோய் வருவது உறுதி;' என்றான். உடனே மன்னன் மைந்தர் மனம் வாடி வாகுவனை நோக்கி, 'அன்ப, தேரைத் திருப்பு. என்னே, இவ்வுலக வாழ்க்கை உண்ணுவதும் உறங்குவதுமாய் ஒழித்து உயர்நிலை அடைய ஒரு நாளும் வழி கோலாது வீணே கழித்து முதுமையில் இவ்வளவு துன்பத்திற்கும் ஆளாகின்றனரே. கரையற்ற கலைக்கடலில் இவ்வுலக வாழ்க்கையின் துன்பத்தை ஒழிக்க ஒரு துளி இடமும் இல்லையா என்று, கூறிச் சிந்திக்கலானார். அப்போது அவர் மனம் 'ஆடிக் காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சு' போல் அலையத் தொடங்கிற்று. தம் மனத்துயரை அவரால் தாங்க முடியவில்லை. தேர்ப் பாகன் தேரைத் திருப்பி ஓட்ட வீடு வந்து சேர்ந்தார்

மறுநாள் காலையில் சித்தார்த்தர் சாரதியுடன் வணிகர் போல் வேடங்கொண்டு ஆவண வீதியில் சென்றார். அங்கே கைப்பொருள் கொண்டு வாணிபம் செய்வார் சிலர். கடன் வாங்கி வியாபாரம் செய்வார் ஒரு சிலர். சிலர் நிறையச் சொல்லி குறைய அளப்பார். குறையக் கூறி நிறையக் கொடுப்பார் சிலர். சிறு லாபங் கருதிப் பொருள்களை விற்றுப் பெரும் பொருள் ஈட்டுவார் பலர். இவ்வாறு வாணிபத்தில் வஞ்சகம் செய்து பொருளை இழப்பார் பலர். அப்போது தப்புக் கணக்கெழுதிப் பிறரை ஏமாற்றிப் பிழைப்பார் பலர். வட்டியில் அதிகம் சொல்லி அதனால் ஒருவர்க் கொருவர் பிணக்குக்கொண்டு மனம் வெறுப்போர் சிலர்; சண்டையிடுவோர் சிலர். அவ்வாறு பூசலிடுவோரைச் சந்து செய்வார் சிலர். இரப்பார், இல்லை என்று மறுப்போர், கூலிக்குச் சுமை தூக்கி வருந்துவோர், பொருள்களைத் தலையில் தாங்கி நடந்து விலை கூறித் தொண்டை புண்ணுவோர், நொண்டி மாடுகளை வண்டிகளில் பூட்டி ஓட்டி அடித்துத் துன்புறுத்துவோர் ஆகிய அனைவரும் அங்கே இருந்தனர்.

இவ்வாறு கடை வீதியில் நிகழ்பவை எல்லாவற்றையும் சித்தார்த்தர் கண்டார். நெஞ்சம் கலங்கினார். மேலும், அங்கே, வேடிக்கை பார்த்துக் காலத்தை வீணாக்குவோரையும், பல்லக்கைச் சுமந்து பலர் வருந்த ஒருவன் அதில் ஏறிச் செல்வதையும், கணவனை இழந்த கைம்பெண்கள் பலருடைய அலங்கோலக் காட்சியையும் கண்டதும் சித்தார்த்தர் சிந்தை புண்பட்டது. உலகம் படும் உழைப்பையும் அதனால் மக்கள் அடையும் துன்பத்தையும் காணப் பொருதவராகி அவ்விடத்தை

விட்டுப் புறப்பட்டார். அப்பால், அந்நகரின் வெளியே சென்றார். அங்கே நகரை அடுத்துச் செல்லும் ஆற்றின் கரையில் அமைதியாக அமர்ந்தார்.

அவ்வழியாக ஒரு பிணத்தைப் பலர் தூக்கிக் கொண்டு வந்தனர். அதைக் கண்ட சித்தார்த்தர் பாகனை அழைத்து, "அன்பா, இஃது என்ன? ஒருவன் உடலைப் பலர் தூக்கிக்கொண்டு வருகின்றனரே" என்று கேட்டார். அதற்கு அத்தேர்ப்பாகன் "சுவாமி, இறந்துபோன ஒருவன் உடலை அவர்கள் தூக்கிக் கொண்டு வருகின்றனர். அதோ இருக்கிற மயானத்தில் உயிர் நீங்கிய உடலைச் சுட்டெரிப்பதற்காகப் பாடையில் வைத்துத் தூக்கி வருகின்றனர். அடுக்கிய விறகின்மேல் வைத்து நெருப்பு வைப்பர். அந்த உடல் இன்னும் சிறிது நேரத்தில் சாம்பலாய் மண்ணோடு மண்ணாய் மாறும். இக்கோரக் காட்சி காண்பதற்கும் அருவருப்பாய் இருக்கும். நினைக்கவும் மனம் கூசும். இந்த இடுகாட்டின் உள்ளே சென்றால் எத்தனையோ உடலம் காக்கைகள் கொத்த ஈக்கள் மொய்க்க நரிகள் தின்னக் கழுகுகள் உண்ண வீழ்ந்து கிடக்கும். எல்லோருக்கும் இக்கதி வருவது உறுதி. இஃதை அறிந்தும் மக்கள் தம்மை மறந்து பொய்யும் சூதும் பொருந்தி வாழுகின்றனர். உண்மையை மறந்து துன்பத்தையும் பாராமல் சிறிது நேரம் இருந்து நீங்கும் இன்பத்திற்காகப் போரும் பூசலுமாக இருக்கின்றனர்" என்றான்.

"அப்பா, அப்படியா? இன்றல்லவா எல்லோரும் இறந்து பிணமாதற்குரியாரே என்றறிந்தேன். ஆ, போற்றி வளர்க்கும் நம் உடம்பின் முடிவு இதுதானே? ஏன் பிறக்கவேண்டும். பிறந்த பின் அவர்கள் ஏன்

இறக்கவேண்டும். பிறப்பதனுல் அல்லவா இப்படிப் பட்ட துன்பங்களுக்கு ஈடாகிறேம். பிறக்காமல் இருப்பதனுல் பெரும் பயனுண்டல்லவா? கொடிது! கொடிது! இவ்வுலக வாழ்க்கை. அறிவுடையோர் இவ்வுலக வாழ்க்கையை விரும்புவரோ? இம்மியளவும் இன்பமில்லாத துன்ப வாழ்வில் இறைவன் ஏன் உயிர்த் தொகைகளை உண்டாக்குகிறுன்? இறைவன் இவ்விதப் பிறவிப் பிணியிலிருந்து தப்ப ஏதேனும் வழியையும் உண்டாக்கி இருக்கமாட்டாரா? அவ்வாறு உபாயம் உண்டாக்கவில்லை என்றுல் தெய்வம் என்றவரை எவ்வாறு இயம்புவது? போதும் நான் நகர்க்கோலம் கண்டது; வா போவோம்" என்று சித்தார்த்தர் பலவாறு கூறி மனம் நொந்து வீடு திரும்பினுர்.

யசோதரை கனவு காணுதல்:

ஒருநாள் இரவு பத்துமணி இருக்கும். வானத்தில் மதியம் பால்போல நிலவை வீசுகிறது. அப்போது வசந்தகாலம் ஆதலால் மெல்லிய பூந்தென்றல் காற்று வீசுகிறது. படுக்கையில் படுத்து யசோதரை நல்ல உறக்கங் கொண்டாள். பணிப் பெண்களும் மற்றையோரும் படுத்துறங்கச் சென்றனர். யசோதரையின் அருகே புத்தரும் அமைதியாய் ஆழ்ந்து துயில்கிருர். முகத்திற்கு அழகுதரும் கண்கள் மூடி உறங்கும் போது அவர் முகத்தோற்றம் முன்னிலும் அதிகமாய் அழகுதந்து விளங்கியது. அறியாமையில் அழுந்திக் கிடப்பதுபோல் அனைவரும் தூங்கும்போது அரசியாகிய யசோதரை ஏதோ தீக்கனவு கண்டாள். முகம் வெளுத்து மனம் வெருவி எழுந்து கூ என்று கூக்குரல் செய்து கணவன் அருகே வந்து நின்ருள். சாந்தமே

Q4 N52

ஒருருவு கொண்டாலென்ன விளங்கும் சித்தார்த்தர் திடுக்கிட்டு விரைந்தெழுந்து, 'பெண்ணே, உனக்கு என்ன நேர்ந்தது? ஏன் இவ்வாறு கூவினாய்? உன் முகம் கலங்கி வெளுத்துவிட்டதே. நிகழ்ந்ததென்ன? அஞ்ச வேண்டாம். கண்மணீ! கலக்கங் கொள்ளாமல் கூறு' என்றார்.

'காதலரே, இப்பொழுது நான் ஏதேதோ சில தீக்கனவுகள் கண்டேன். அதனால் அலறி எழுந்தேன். அக்கனவுகளை இப்போது நினைத்தாலும் என் உள்ளம் கலங்குகிறது' என்று யசோதரை கூறினாள்.

கௌதமர் கேட்டுக் கவலையுற்று, 'தீக்கனவுகளா? அக்கனவுகள் எவை? அஞ்சாமல் கூறு' என்று கேட்டார். 'நாதா, நாடு கடுங்காற்றால் நாசமடைந்ததாகவும் என் ஆடை அணி சிதைந்ததாகவும் பெரிய மலை கடலில்போய் அமிழ்ந்ததாகவும் கனவு கண்டேன். தீக்கனவுகளால் என்ன தீங்கு எனக்கு நேருமோ என்று என்னெஞ்சம் பதறுகிறது. நான் இறந்துவிடுவேனோ அல்லது நீங்கள் என்னைத் துறந்துவிடுவீர்களோ ஒன்றும் அறியேன். பின்னால் வரக்கூடிய தீங்குக்கு முன்னறிகுறியாய் இத்தீக்கனவுகள் தோன்றின' என்று யசோதரை தன் உடல் நடுக்கத்துடன் கூறினாள்.

அதற்குச் சித்தார்த்தர், 'நங்காய், நல்லோருக்கே இத்தகைய கனவுகள் தோன்றும். அனைவருக்கும் வருவது வந்தே தீரும். அதனைத் தடுக்க எவராலும் முடியாது. வாராதனை வருந்தி அழைத்தாலும் வாராது. நீ அதற்காகப் பயப்படவேண்டாம். மகிழ்ந்திரு. அக்கனவுகளினால் தீங்கொன்றும் நேராது. நிலையில்லாத இந்த உலக ஆசை அறும்; அறியாமை நீங்கும். இவைகளுக்கு நானே வழி செய்வேன்; நீ உறங்கு' என்று கூறித் தேற்றினார்.

யாசோதரை சித்தார்த்தர் கூறியதைக் கேட்டதும் ஒருவாறு கலக்கம் நீங்கி, 'நாதா, நான் உங்களைப் பிரிந்து ஒரு கணமும் வாழேன். இஃது உறுதி' என்றுரைத்து உறக்கங் கொள்வாள் ஆயினாள்.

110740

7. சித்தார்த்தர் துறவு

அன்று பொழுது விடிந்ததும் சித்தார்த்தர் தம் தந்தை சுத்தோதனனிடம் சென்றார். சுத்தோதனன் தன் ஆருயிர் போன்ற அருமை மகனைக் கண்டதும் அகமகிழ்ந்து, 'சித்தார்த்தா, வா. நகர்க்காட்சியை நேற்று நன்றாய்க் கண்டு மகிழ்ந்தாயா' என்றான்.

கௌதமர் சிரித்து, 'அப்பா, கண்டேன்; பிறவியை ஒழிக்க உலக உறவினைப் போக்கவேண்டு மென்பதே எனக்கும் பிறர்க்கும் பயன்படக்கூடிய ஒரு வழியைக் கண்டால்தான் நான் மகிழ்வேன். அதற்கு விருப்பத்தோடு விடை கொடுங்கள்' என்றார்.

சுத்தோதனன் அம்மொழிகளைக் கேட்டதும் மனங் கலங்கி நின்றான். பிறகு ஒருவாறு உள்ளத்தைத் திடஞ்செய்து கொண்டு தன் திருக்குமாரர் திருமுகத்தைப் பார்த்தான். 'சித்தார்த்தா, சிந்தித்துக் கேள். எந்தக் காரியத்திற்கும் ஏற்ற ஒரு காலம் உண்டு. கல்வி பயிலுதற்கும், மனைவாழ்க்கை நடத்துவதற்கும், துறவறம் பூண்பதற்கும் காலம் இது இது எனப் பெரியோர் ஏற்படுத்தி இருக்கின்றனர். இல்லறம் ஏற்றுச் சில ஆண்டுகளே ஆயின. இந்த இளமைக் காலத்தில் மூப்பில் மேற்கொள்ளத் தக்க துறவறத்தை விரும்பலாமா?' என்றான்.

சித்தார்த்தர் 'தந்தையே, பசி எடுக்கும்போதல்லவா உணவு உண்ணவேண்டும்; வீடு தீப்பிடித்த உடனேயன்றோ அணைக்க முயலவேண்டும். என் உள்ளம் உலக துன்பத்தைக் கண்டு பற்றி எரிகிறது. இன்பம் பெறுதற்குரிய வழி எதுவெனக் கண்டு உணர என் உள்ளம்

விரும்புகிறது. ஆகையால், காலந்தாழ்க்கலாகாது. அரசாட்சி வேண்டேன். இன்றே புறப்படுகின்றேன். உன்னுடைய விடையும் உனது மௌன நிலையினால் கிடைத்தது' என்று சொல்லிவிட்டு விடை பெற்றுத் தம் இருக்கை சேர்ந்தார்.

அன்றிரவு உறக்கத்திலிருந்து எழுந்து யசோதரை முகத்தை நோக்கி 'அன்புக்கினியாளே, இல்லறம் நீங்கித் துறவறத்தைமேற்கொள்ளத் துணிந்தேன். இதோ இந்த அரச வாழ்வை இன்றோடு கைநழுவ விடுகின்றேன்' என்று சொல்லித் தம்மரச உடையைக்களைந் தெறிந்தார். கௌதமர் நெஞ்சம் நாளுக்குநாள் துறவிலேயே நிலைத்துவிட்டது. தந்தை சுத்தோதனன் கண்ணீர் விட்டுக் கலங்கியும் சித்தார்த்தர் மனம் மாறவே இல்லை. மனைவி வருந்துவாளே என்றோ மாதா பிதாக்கள் வருந்துவார்கள் என்றோ சிறிதும் எண்ணவில்லை. ஆனால், அன்று தமக்குப் பிறந்த அழகு நிறைந்த குழந்தையைக் கண்டு 'இப்பொழுது இவ்விடம் விட்டுச் செல்லும் நான் இனி மீண்டு இங்கு வரப்போவதில்லை, எத்தனை நாளாக என் உள்ளத்தில் இருந்து வந்த கருத்து இன்றே பலன் கொடுக்கப் போகிறது. இன்று பிறந்த குழந்தையை நான் நன்றாய்க்கூடப் பார்க்கவில்லையே. ஆதலால் குழந்தையைப் பார்த்து விட்டுப் போவோம்' என்றெண்ணிக் குழந்தையின் அருகே போய் நின்று கனிவோடு நோக்கினார். வஞ்சகம் பயம் இல்லாமல் களங்கமற்ற முகத்தைக் கண்டதும் உள்ளம் உருகியது. 'மகனே, துன்பம் நிறைந்த இந்த உலகில் நீ ஏன் பிறந்தாய்' என்று தமக்குள் நினைந்து வருந்தினார். பிறகு, மனைவியைப் பாரத்து 'கற்பின்

கொழுந்தே, பொற்பமர் செல்வி, நீ நன்றாய் உறங்குகிறாய். உன்னை எழுப்பினால், என்னைத் தடுப்பாய். ஏழைக்கும் ஏழையாய் எங்குஞ் சென்று பிச்சை ஏற்று உண்டு வாழ முடிவு செய்தேன். மக்கள் வணங்குந் தெய்வங்களால் யாதொரு துன்பமும் நீங்கிச் சிறிய இன்பமும் அடையவில்லை. அனைவரும் இன்பம் பெறுவதற்கேற்ற நல்வழி ஒன்றைக் கண்டுபிடிக்கப்போகிறேன்' என்று பல கூறி எழுந்து யசோதரை உறங்கும் கட்டிலை வலம் வந்தார். உடனே தீப்பற்றிக்கொண்ட வீட்டிலுள்ளார் விரைந்து வெளியேறுவதுபோல் மாளிகைவிட்டு வெளியே வந்தார். வெளியில் தூங்கிக் கொண்டிருந்த சாரதியை எழுப்பி, "நமது கண்டகம் என்னும் குதிரையைக் கொண்டுவா" என்றார்.

அதைக்கேட்ட வாகுவனும் அந்தப் பாதி இரவில் எழுந்து 'சுவாமி, இந்த இரவில் தேவரீர் எழுந்து செல்வதற்குக் காரணம் என்ன?' என்றான். அதற்குச் சித்தார்த்தர் தமது எண்ணத்தைச் சுருக்கமாய் அவனுக்கு எடுத்து விளக்கித் தேறுதல் கூறினார். அதன் பிறகு அவன் சித்தார்த்தர் விருப்பப்படி குதிரையைக் கொண்டுவந்து நிறுத்தினான். குதிரையின்மேல் ஏறிக்கொண்டு சித்தார்த்தர் அவ்விரவே அந்நாட்டின் எல்லையைக் கடந்து குதிரையை விட்டு இறங்கினார்.

மையாடு கண்ணியும் மைந்தரும் வாழ்வும் மனையுஞ் செந்தீ
ஐயா, நின் மாயை யுருவெளித் தோற்றம் அகிலத்துள்ளே
மெய்யாயிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப்
போனதுவே.

என்றது சித்தார்த்தர்க்குப் பொருத்தமாயிற்று.

சித்தார்த்தர் சாரதியை நோக்கி, 'அன்பா, என் தந்தை என்னிடத்தில் கொண்டுள்ள அன்பை இன்றோடு விட்டுவிடச் சொல். இல்லறத்தில் இருந்து துக்கக் கடலைத் தாண்ட வழி தெரியவில்லை. அந்நெறியைக் காணவே நான் பிரிந்தேன் என்பதாகச் சொல்' என்று கூறினர்.

சந்தகன் என்னும் அச்சாரதி கண்ணீர் விட்டழுது, 'அரசே, தங்கள் திருமுகத்தைப் பார்த்து வாழும் எங்களை விட்டு இவ்விளம் பருவத்தில் சந்நியாசம் கொள்ளத் துணிந்தது தகுமா?' என்று கூறி வருந்தினன். சித்தந் தெளிந்த சித்தார்த்தர் 'அன்பா, வருந்தாதே. இறைவன் திருவடி நோக்கி வாழ்வது நல்லது. என் திருமுகத்தை நோக்கி வாழ்வதேன்? தெய்வச் செயலால் நான் இறந்து விட்டால் அப்போது நீ என்ன செய்வாய்? ஆதலால் நீ வருந்தாமல் கண்டகம் என்னும் நம் அருமைக் குதிரையை அழைத்துக்கொண்டு போய் நாட்டை அடைவாய்; நான் தெரிவித்தவைகளை என் தந்தையாரிடம் மறவாமல் சொல்வதே நீ எனக்குச் செய்ய வேண்டிய சிறந்த உதவியாகும்' என்று கூறி அவனை அனுப்பினர். சாரதியும் மனவருத்தத்துடன், நகர்க்குத் திரும்பிச் சென்றான்.

8. உண்மை வினுதல்

சித்தார்த்தர் பொழுது விடிந்ததும் பிம்பிசாரன் என்னும் மன்னன் ஆளுகையில் அடங்கிய இரத்தின கிரியில் உள்ள ஒரு குகையில் போய்த் தங்கினுர். ஒவ்வொரு நாளும் அம்மலையை அடுத்துள்ள ஊர்களில் சென்று பிச்சை ஏற்று உண்டு வந்தார். மாலை வேளைகளில் மலையிடங்கள் பலவற்றிற்கும் சென்று சுற்றிப் பார்த்து வருவார். இவ்வாறு சித்தார்த்தர் இருந்து வரும் நாளில், அம்மலைமேல் உண்ணும் உணவும் உறக்கமுமின்றி உடலுக்கும் உயிருக்கும் வருத்தத்தை உண்டாக்கித் தவம் செய்து கொண்டிருக்கும் முனிவர் பலரைக் கண்டார். ஒருநாள் அவர்களிடம் அணுகி 'சுவாமிகளே, உயிர்கள் துக்கத்திலிருந்து நீங்கி எப்போதும் இன்பமே நுகரும் இனிய நன்னெறியை நீங்கள் இத்தனை நாளாய்க் கண்டதுண்டா?' என்று சித்தார்த்தர் கேட்டார். அதற்கு முனிவர்கள், தமது கொள்கைகளை விரித்துரைத்தார்கள். சித்தார்த்தர் கேட்ட வினவுக்குத் தக்க விடை கூருமல் மதக்கொள்கைகளை விளம்பியதால் அவர்க்கு அவ்வுரை பிடிக்கவில்லை. முனிவரிடம் மீண்டும் ஒன்றும் பேசாமல் பின்னும் உலகில் வெறுப்புக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார். அப்போது பகல் பன்னிரண்டு மணிக்கு மேலாகியும் அவ்விடத்தில் இருக்க மனமின்றிப் பிம்பிசார மன்னனுடைய இராஜதானிக்குச் செல்லும் வழியில் வந்து தங்கினுர்.

கதிரவன் தனது கருங்கதிரால் எல்லாப் பொருளும் வெப்பத்தால் வருந்தும்படி செய்துகொண்டிருந்தான். அத்தகைய வெயில் வேளையில் சித்தார்த்தர்

தங்கியிருந்த வழியாகச் சிலர் ஆட்டு மந்தையை ஓட்டிக் கொண்டு வந்தனர். அந்த ஆட்டு மந்தையில் ஓர் ஆட்டுக் குட்டி கால் ஊனப்பட்டு நிலத்தில் ஊன்றி நடக்க முடியாமல் நொண்டி நொண்டி நடந்து வந்தது. அதன் தாய் ஆடு மந்தையோடு போகாமல் தன் குட்டியினிடம் கொண்ட அன்பால் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே மந்தைக்குப் பின்னுல் வந்துகொண்டிருந்தது. அதைக் கண்ட சித்தார்த்தர், தாயாட்டைப் பார்த்து, 'ஆடே, நீ அஞ்சவேண்டாம்; உன் அருமைக் குட்டியை நான் தூக்கிக்கொண்டு வருகிறேன். வருத்தமின்றி மந்தையோடு சேர்ந்து போ" என்று சொல்லி அந்த ஆட்டுக் குட்டியைத் தூக்கித் தம் தோளின்மேல் வைத்துக்கொண்டு தாமும் இடையருடன் தொடர்ந்து நடந்தார்.

இச்செயலைக் கண்ட இடையர்கள் ஆச்சரியப்பட்டுச் சித்தார்த்தரை நோக்கினர். சித்தார்த்தர் அவர்களைப் பார்த்து, 'அன்பர்களே, இந்தக் கொடிய வெயிலில் ஆடுகளை எங்கே ஓட்டிச் செல்லுகிறீர்கள்' என்று கேட்டார். 'ஐயா, இந்த நாட்டு மன்னன் பிம்பிசாரன் என்பவன் ஒரு யாகம் செய்கிருன். அந்த யாகத்திற்காக அரசர் கட்டளைப்படி இந்த மந்தையை ஓட்டிக் கொண்டு போகிருேம்' என்றனர் இடையர். அதைக் கேட்டதும் சித்தார்த்தர் உள்ளம் திடுக்கிட்டது. உடனே, அன்பும் அருளுமின்றி இத்தனை ஆடுகளையும் கொல்லத் துணியலாமா? அந்த அரசனை நல்வழிப் படுத்துவது நமது கடமையாகும் என்றெண்ணி அவ்ருடன் சென்ருர்.

9. மகனை இழந்த தாயின் மனம் தேறச் செய்தல்

இவ்வாறு மூடமான இளங்குட்டியைத் தோளில் சுமந்துகொண்டு சிறிது தூரம் தொடர்ந்து சென்று 'வெயில் மண்டையைப் பிளக்கிறது. இங்கே சிறிது தங்கிப் போவோம்' என்று கூறித் தங்கச் செய்தார் சித்தார்த்தர். அப்பொழுது அவ்வழியே ஒரு மங்கை அழுது கொண்டே கையில் இறந்த தன் மகனை எடுத்துக் கொண்டு வந்தாள். 'உயிரிழந்த தன் மகனை எழுப்பித் தருவார் உண்டோ' என்று எங்கும் அலைந்து வந்த அம்மங்கை, சித்தார்த்தர் திருவடியை வணங்கி நின்றாள். சித்தார்த்தர், தன் முன்னே சந்திரமதிபோல் நின்ற நங்கையை நோக்கி, 'அம்மா, உனக்கென்ன துன்பம் உண்டாயிற்று? வருத்தம் இன்றி விளம்புவாய்' என்றார்.

அம்மாது மனம் கசிந்துருகிக் கண்ணீர் ஆறாக வடித்து இறந்த தன் மைந்தனைக் காட்டி, 'இச்சிறுவன் செடிகளுக்கிடையே விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது, படம் எடுத்துக்கொண்டு வந்த பாம்பு ஒன்று அவன் கையில் காப்புப்போல் சுற்றிக்கொண்டது. சிறுவன் பால் மணம் மாறாத பாலகன் ஆகையால் அப்பாம்பை ஏதோ ஒரு விளையாட்டுப் பொருள் என்றெண்ணி வால் தலை இவற்றை வலித்து வருத்தம் தோன்றச் செய்துவிட்டான். சிறிது நேரம் சென்றதும் சிறுவன் உடலில் ஈரம் மிகுந்தது. உணர்வு நீங்கியது. கருவிழி இரண்டும் நின்ற நிலையில் அசைவின்றி நின்று

விட்டன. உடனே சிலர் 'விடமேறிச சிறுவன் இறந்துவிட்டான்' என்றனர். வேறு பெரியார் பலர், 'இது சன்னி நோய், சஞ்சீவி தந்தாலும் தீராது' என்றனர். ஆனால், நான் மருத்துவர் பலரிடமும் கொண்டு போய்க் காட்டி மயக்கம் நீங்க மருந்து கொடுக்க வேண்டினேன். அவர்கள் 'பயித்தியமோ, இனிமேல் ஒன்றும் பயனில்லை. இறந்த பிணம் எழுந்திருக்குமோ' என்றனர். அன்போடு பாம்பு கொடுத்த முத்தத்தால் உயிருக்கும் துன்ப முண்டாகுமா? இனிமேல் நான் எப்படி வாழ்வேன். இந்தப் பிள்ளையைத் தவிர வேறு பிள்ளை எனக்கில்லை. 'ஐயா, எப்படியாவது என்னிடம் அன்பு வைத்து என் மகனை உயிர் பெறச் செய்தருளுங்கள். உங்களைக் கண்டு வருத்தத்தைப் போக்கவே காடு மலை கடந்து கால்கள் நோக வந்தேன்' என்று இரந்தாள்.

இரந்த மொழி கேட்டு இரங்கிய உள்ளத்தோடு சித்தார்த்தர், 'தாயே, உன் மனக் கவலையைப் போக்க மருந்து தருகிறேன். நீ போய் இறவாத வீட்டில் கால் படி கடுகு கேட்டு வாங்கி வந்தால் உன் துயரத்தை நீக்குவேன்' என்றார். உடனே, அப்பெண் பக்கத்திலிருந்த ஊர்களில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று கடுகு கேட்டாள். ஒவ்வொருவரும் கடுகு கொண்டுவந்து கொடுக்க வந்தனர். சித்தார்த்தர் கூறியபடி இறவாத வீடா என்று மாது கேட்டால், அவர்கள், 'எங்கள் வீட்டில் எத்தனையோ பேர் இறந்திருக்கிறார்கள். யாரும் இறவாத வீடும் இருக்குமா? பிறந்தோர் இறப்பதும் இறந்தோர் பிறப்பதும் இவ்வுலக இயற்கை ஆயிற்றே' என்று கூறுவார் ஆயினர். அதைக் கேட்ட

அவள் மனம் தேறிக் கௌதமரிடம் வந்து நிகழ்ந்ததைத் தெரிவித்தாள்.

மங்கையின் மனத் தெளிவை அவள் கூறிய மாற்றத்தால் அறிந்து சித்தார்த்தர், 'தாயே, இறந்த இப்பிள்ளையைக் குறித்து இரங்குதல் வேண்டாம். உடம்பெல்லாம் வாயாக அழுதாலும் உயிர் மீண்டும் வாராது. இந்த மகனைக் கொண்டு போய் எரித்துவிடு' என்று கூறித் தேற்றி அனுப்பினர்.

10. உயிர் அருள் விரித்தல்

பின்னர், சித்தார்த்தர் ஆட்டு மந்தையுடன் தொடர்ந்து சென்று பிம்பிசாரனுடைய கொடிகள் நிறைந்த நகர்க் கோட்டை வாயிலை அடைந்தார். அப்போது செஞ் ஞாயிற்றின் வெம்மை குறைந்தது. தென்றல் வீசும் மாலைப் பொழுது வந்தது. சோலையிலே வண்டுகள் பாடித் தேனுண்டு மகிழ்ந்து திரிந்தன. பறவைகள் கூட்டில் வந்து மாலைப் பொழுதானதால் கூவின. அக்காலத்தில் நகரின் உள்ளே சென்ற சித்தார்த்தரை வாயிற் காவலர் யாவரும் தடை செய்யாமல் வழிவிட்டு ஒதுங்கி நின்றனர். வீதியில் காண்போர் அதிசயத்துடன், உயிர்களின் துயருக்கு மன மிரங்கிக் கருணை காட்டும் இச் செயல் அல்லவோ பெரிய தவம் ஆகும்? என்று புகழ்ந்து பேசிக்கொண்டனர். வீடு நோக்கி வரும் உழவரும் மற்றத் தொழிலாளிகளும் சித்தார்த்தர் சிறந்த செயலைக் கண்டு வணங்கி வாயாரப் போற்றி நின்றார்கள்.

இவ்வாறு சித்தார்த்தரைக் கண்டோர் எல்லோரும் புகழ்ந்தும் வணங்கியும் நிற்க, அவர் வீதி வழி நடந்து மன்னனுடைய யாகசாலையின் பக்கத்தில் சென்று சேர்ந்தார். அங்கே வேதம் ஓதும் வேதியர் நிறைந்து நின்றனர். சிலர் மந்திரங் கூறி ஓம குண்டத்தில் எரி வளர்த்துக் கொண்டிருந்தனர். எரி கோயில் கோபுரம் போலக் கொழுந்து விட்டெரிந்தது; குறையும்போது நெய் விட்டு வளர்த்தனர். பக்கத்தில் ஒரு குண்டத்தில் நல்ல வெள்ளாட்டைப் பலிக்கெனத் தூணில் கட்டியிருந்தது. அந்த ஆடு அதற்குமேல் நடக்க இருக்கும்

உயிர்க்கொலைக்கு அஞ்சி அழுவது போல் வாய் திறந்து கத்திக் கொண்டிருந்தது. ஆடுகளைப் பலியிடுவதற்கு நன்றாய்த் தீட்டிய கத்தி யொன்று கீழே வைக்கப்பட்டிருந்தது. இவற்றை யெல்லாம் கண்ட சித்தார்த்தர் நெஞ்சம் பிளந்தது போல் ஓரருள் ஆவேசம் தோன்றியது. உடனே, அச்சமும் அருளும் இன்றி யாகத்தின் பேரால் கொடூரக் கொலை புரியச் செய்யும் சடங்குகளைக் கண்டு நிற்கும் அரசன் அருகே சென்றார் சித்தார்த்தர். அவரைக் கண்டதும் அரசன் வரவேற்றான். அரசன் வரவேற்பை அவமதித்துச் சித்தார்த்தர் அரசனை நோக்கி, 'உயிர்களைக் காக்கத் தோன்றிய நீ உயிர்களைக் கொல்லலாமா? வாயில்லா உயிர்களைக் கொன்று உன் பாவத்தை ஒழித்துப் புண்ணியத்தைத் தேடப் போகிறாய்? கடவுளால் உண்டாக்கிய உயிர்களைக் கொன்றால் கடவுள் மகிழ்வாரா? கடவுளால் காக்கப்படும் இவ்வுயிர்களைக் கொன்றால் பிறகு நீ நினைத்தாலும் திருப்பி எழுப்ப முடியுமா? எறும்பு முதல் யானை ஈராகவுள்ள எல்லா உயிர்களுக்கும் உயிர் ஒன்றே அல்லவா? உயிரை உயர்வாகக் கருதுதல் உனக்கும் இந்த ஊமை உயிர்களுக்கும் உயிர் ஒன்றே அன்றோ! அன்பு காட்டுதலே அரிய தவம். அவரவர் செய்த பாவ புண்ணியம் அவரவரை விட்டு நீங்கா. ஆகையால் ஆடுகளைக் கொல்லாமல் அருள் வேள்வி செய்ய வேண்டும்' என்று அங்கிருந்தோர் அனைவருடைய உள்ளமும் நீராய்க் கரைந்தோடுமாறு ஜீவகாருண்ணியத்தைக் குறித்து விளக்கிக் கூறினார்.

இவ்வாறு சித்தார்த்தருடைய அமுத மொழியைக் கேட்டதும் மன்னன் மனம் மாறிப் பள்ளத்

தைக் கண்ட வெள்ளம்போல் சித்தார்த்தர் திருவடியில் விரைந்து வீழ்ந்து வணங்கினன். வணங்கிய வேந்தன் எழுந்து 'சுவாமி, அறியாமல் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுங்கள். இதுவரையில் செய்த உயிர்க் கொலைக்கோ அளவில்லை. தங்கள் அறிவுரையால் என் அறிவுக் கண் திறக்கப் பெற்றேன். இனிமேல் நானும் கொலை செய்ய மாட்டேன். என் நாட்டிலும் கொலை செய்யவிட மாட்டேன். இது உறுதி. இது விரதம்' என்று கூறி மீண்டும் வணங்கி எழுந்தான்.

பிறகு அம்மன்னன் 'யாரும் எக்காரணத்தை முன்னிட்டும் இந்நாள் முதல் உயிர்க்கொலை செய்தல் கூடாது. இது அரசன் ஆணை' என்பதாக நாடெங்கும் பறையறைவித்தான். யாகசாலை உடனே அழிக்கப் பட்டது. ஆடுகளை அவிழ்த்து விட்டனர். அந்தணர் அனைவரும் அருட்கொள்கையுடன் தம்தம் இல்லம் அணுகினர். அரசன் சித்தார்த்தரை வணங்கி அரண்மனையிலேயே தன்னோடு இருக்கும்படி வேண்டினன். அதற்கவர், 'உத்தம, நான் உண்மை நெறியொன்றை நாடித் திரிகின்றேன். அதனைக் கண்டால் அன்றி ஒரு சிறு நேரமும் ஓரிடத்தில் நிலைத்து நிற்கமாட்டேன்' என்று கூறி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு விட்டார்.

11. புத்தராதல்

உண்மை உணர்வுடைய உத்தமராய சித்தார்த்தர் பிம்பிசாரனுடைய நகர்விட்டுச் செல்லும்போது வழியில் இரு முனிவரைக் கண்டார். அவர்களைத் தம் ஆசிரியராகக் கொண்டு அங்கே நீண்ட நாள் உபதேச முறையில் ஒழுகி வந்தார். ஒருநாள், 'உயிர்களுக்கு முழு இன்பந்தரவல்ல நெறியைநீங்கள் கண்டதுண்டா?' என்றார். 'வேத மார்க்கமின்றி வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை' என்று முனிவர் மறுமொழி பகர்ந்தனர். அதனைக் கேட்ட சித்தார்த்தர் மன விருப்பமின்றி அப்பொழுதே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

சென்று தவசிகள் சிலரை அடைந்து உள்ளக் கருத்தை வெளியிட்டார். அத்தவசிகள் 'தவத்தால் தலைக்கூடும் தங்கள் கருத்' தென்று கூற, ஊண் உறக்கமின்றிக் கடுந்தவம் புரிவாராயினர். அதனால் அவருடைய உடல் இளைத்துச் சோர்வு மிகுந்து சக்தி அற்று நின்றார். இவ்வாறு பலநாள் தவஞ்செய்யவே நிற்கவும் வலிமை இல்லாமல் களைத்து மூர்ச்சையாய்க் கீழே விழுந்து விட்டார். அவ்வழியே வந்த ஓரிடையன் சித்தார்த்தர் கீழே விழுந்து கிடப்பதைக் கண்டான். ஆனால், அவர் உள்ள நிலையைப் பார்த்து அவரைத் தொடக்கூடாதென்றெண்ணித் தன்னுடைய ஆடுகளில் ஒன்றை அவர்க்கருகே கொண்டு வந்து நிறுத்தி அவர் வாயில் பாலைக் கறந்தான். அப்பால் அவர் வாய் வழியாக இறங்கியவுடன் சித்தார்த்தர் களைப்பு நீங்கி எழுந்தார். தவத்தால் யாதொரு பயனும் இல்லை என்பதைத் தெளிந்தார். உடம்பிருந்தாலல்லவா உண்மை காண முடியும்

என்றறிந்தார். உயிர் போகாமல் பால் அளித்துக் காத்த இடையனை அருகே அழைத்தார்.

இடையன் அவர் அருகே அஞ்சி ஒதுங்கி நின்றான். 'அப்பா, மக்களில் உயர்வு தாழ்வு ஏது? ஏன் என்னருகே வருவதற்கு அஞ்சுகின்றாய். பிறப்பால் அனைவரும் சமமானவரே. உலகத்தில் இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்; இது தெரியாமல் விலகி நிற்கிறாயே' என்று பல இனிய மொழிகளை இயம்பினார். அதனைக் கேட்டதும் பின்னும் அந்த இடையன் அதிக அன்பு கொண்டு இன்னும் சில ஆட்டின் பாலைக்கறந்து கொண்டு வந்து கொடுத்துக் குடிக்குமாறு வேண்டினான். அந்தப் பாலையும் அவர் அன்போடு பெற்று அருந்திப் பசி நீங்கி ஆசி கூறி அவனை அனுப்பி விட்டு ஆங்கிருந்த ஒரு மரத்தடியில் அமர்ந்தார்.

அங்கே, 'துன்ப நீக்கத்திற்கு நெறிகாணத் துறவு பூண்டு ஆறு ஆண்டுகள் ஆயின. இன்னும் அறிந்த பாடில்லை. தவத்தால் அறியலாம் என்றெண்ணித் தவறாய் ஒழுகிக் காலத்தை வீணாக்கினேம். மனத்தை அலைய விடாமல் ஒருமனப்படுத்தி ஆய்ந்தால் அறியக்கூடும்' என்று தம்மகத்தில் எண்ணி ஆராய்வாரானார். ஆராய்ச்சியில் மனம் முழுதும் அல்லும் பகலும் அமைந்ததால் உணவைப் பற்றிய கவலையை மறந்தவர் ஆனார். இவ்வாறு இரவு பகல் உணவும் உறக்கமும் இல்லாமல் பல நாள் பட்டினியாய் இருந்து வந்தார்.

அப்போது அவரிருக்கும் இடத்திற்கு அடுத்துள்ள கிராமத்திலிருந்து சுஜாதை என்னும் ஒரு மங்கை அங்கே வந்தாள். அவள் தனக்குப் பிள்ளை பிறந்தால்

பூஜை செய்வதாக வனதேவதையிடத்தில் வரங் கேட்டாள். பிறகு அவள் அவ்வாறே ஓராண் மகவைப் பெற்ருள். அதனுல் அவள் முதலில் சொல்லிக்கொண்டபடி வனதேவதைக்குப் பூசை செய்து தன் பிரார்த்தனையை முடித்துக்கொள்ள அங்கே வந்தாள். கையில் பாற்சோறும், பழமும், பாயசமும், மற்றும் பலவகைப் பொருளும் கொண்டு வந்தாள். வரும் வழியில் மரத்தடியில் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும் அடிகளைக் கண்டாள். அவரையே வனதெய்வம் என்று கருதிப் பழத்தையும் பாயசத்தையும் அருகில் வந்து கொடுக்க, அவர் உணர்வுபெற்றுக் கண் திறந்து பார்த்து அவற்றை வாங்கி வயிருர உண்டு மகிழ்ந்தார் பின் பாற்சோறும் படைத்தாள். உடனே சித்தார்த்தர், 'தாயே, நீ எனக்கிவ்வளவு இனிய உணவு அளித்ததற்கு ஏதேனும் காரணம் உளதோ' என்று கேட்டார்.

அதைக்கேட்ட அம்மாது தனது உள்ளக் கருத்தை உண்மையாக எடுத்துரைத்தாள். உடனே சித்தார்த்தர், 'அம்மா! நீ நினைத்ததுபோல் நான் ஒரு தெய்வம் இல்லை. உன்னைப்போல் நான் ஒரு மானிடனே. நான் ஒரு நன்னெறி காணும் நிலைமையால் இங்கு இருக்கிறேன்' என்று உண்மை உரைத்துப் பின்னும் 'பெண்களின் திலகமே, நீ பெரிதும் இல்லற வாழ்க்கையையே விரும்புகின்றனை போலும்' என்ருர். அதற்கு அம்மங்கை நல்லாள் 'ஐயனே, அடியாள் நாள்தோறும் தவருமல் என் கணவரையே தெய்வமாகக் கொண்டு வணங்கி, அவருக்கு வேண்டும் பணிகளை மனங் கோணுமல் அன்புடன் செய்து அக மிக மகிழ்கின்றேன் பெண்ணுய்ப் பிறந்த என் போன்ருர்க்கு இதைவிட

வேறு என்ன கடமை இருக்கிறது? பெண்களுக்குச் சிறந்த கணவனிருத்தல் வேண்டும். உயர்ந்த அறிவு வாய்ந்த ஒரு மகன் பிறக்க வேண்டும். அந்த இரண்டு பெரும் பேற்றையும் பெற்று என் கடமையைப் புரிந்து வாழ்கின்றேன். மேலும் நன்மை விதைத்தால் நன்மை விளையும், தீமை விதைத்தால் தீமை விளையும், என் பதையும், முற்பகல் செய்தால் பிற்பகல் விளையும் என்பதையும் கடைப்பிடித்து ஒழுகி வருகின்றேன். ஆதலால் இவ்வுலகத்தில் யாதொரு குறைவும் இன்றி இன்பமாய் வாழ்ந்து வருகின்றேன்' என்ருள்.

இதைக் கேட்டதும் சித்தார்த்தர், 'தாய்போன்ற தேவி, நான் இவ்வளவு நாட்களாய் வருந்தித் தேடிக் கொண்டிருந்ததை இன்று உன் வாக்கினுலேயே ஒரு கணப் பொழுதில் உணர்ந்து கொண்டேன். நீ இன்றும் என்றும் இன்பம் பெருக வாழ்வாயாக. நான் போய் வருகிறேன். உன்னுல் என் ஞானக் கண்ணில் 'முற்பிறப் பில் தீவினை செய்தோர் இப்பிறப்பில் தீமை அனுபவிப்பர். முற்பிறப்பில் மற்ற உயிர்களுக்குத் தீங்கு புரியாமல் நன்மை செய்தோர் மறுபிறப்பில் இன்பம் அடைவர் என்பதை நீயே தோற்று வித்தாய். தீய செயலுக்குக் காரணம் அறியாமையே. அறியாமை அழிந்தால் அல்லல் நீங்கும் என்னும் உண்மை தெளிவாயிற்று என்று கூறி அம்மங்கைக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டுத் தாம் புறப்பட் டார். உலக துன்பமும் அது உண்டாகும் காரணமும் உணர்ந்த சித்தார்த்தர் துன்பத்தை நீக்கும் வழியைக் கண்டார். விரும்பியதை அறிந்ததால் அகமகிழ்ந்து, மக்களுக்கு அந்நெறியை விளக்கிக் கூறித் தீய செயலைச்

செய்யாமல் இருக்கச் செய்தலே கடமை என்றறிந்தார். அதனால், உடனே உலகத்தார்க்குத் தாம் கண்ட உண்மையை உரைத்து எங்கும் பரவச் செய்தார். அதுமுதல் சித்தார்த்தருக்குப் புத்தர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. உலகில் பாவம் பெருகி அறம் குறுகி நன்மை நீங்கித் தீமைநிறையுமானால் உயிர்களை நல்வழிப் படுத்த அடியார் தோன்றுவர் என்பது எல்லா மதத்தினருக்கும் உரிய ஒரு கொள்கை. அதுபோலவே பௌத்தர்களும் உலகில் இன்பம் குறைந்து துன்பம் மிகும்போதெல்லாம் புத்ததேவர் அவதரிப்பார் என்று கூறுகின்றனர். அவ்வாறு தோன்றும் புத்ததேவர்களுள் கௌதம குலத்தில் தோன்றிய சித்தார்த்தரும் ஒருவராவார். ஆகையால், அவரை அனைவரும் கௌதம புத்தர் எனக் குலப்பெயரோடு கூறுவார் ஆயினர்.

புத்தர் பற்பல இடங்களுக்கும் சென்று சொல்மாரியால் உயிர்களாகிய பயிர்களைத் தழைக்கும்படி செய்தார். அரசன் முதல் குடியானவர் வரையுள்ள எல்லா மக்களையும் தம் வழியில் திருப்பி இன்றும் விளங்கும் ஒரு பெரிய மதத்தை நிலை நாட்டினார். நாற்பத்துநான்கு ஆண்டுகள் ஒவ்வொரு ஊர்தோறும் சென்று அறநெறியைப் போதித்துப் புத்தராய் நிருவாணம் அடைந்தார். அன்று முதல் இன்றுவரை அவரை எல்லோரும் போற்றிப் புகழ்ந்து வழிபட்டு வருகிறார்கள். அவருடைய பெருமை அளவிடற்கரிதாய் எங்கும் பரவுவதாயிற்று. இவர் இவ்வாறு தன்னலங்கருதாமல் பிறர் நலங் கருதி வாழ்கிறார். இவருடைய பெற்றோர்க்கு இவரைப் பிரிந்ததனால் உண்டான வருத்தமோ பிரியாமல் இருக்கிறது.

12. கபிலைக்கு மீளுதல்

கபிலவாஸ்து நகர மாந்தர் அனைவரும் சித்தார்த்தர் பிரிவு கருதி வருத்தம் அடைந்து வாடிய முகத்துடன் வாழ்வார் ஆயினர். மக்கள் மன வருத்தமே அளவிட முடியாததா யிருந்தது என்றால், அவரைப் பெற்றோர் அடைந்த வருத்தத்தைச் சொல்லவும் வேண்டுமா?

சித்தார்த்தரை விட்டுவிட்டு வந்த சந்தகன் திரும்பி நகர் செல்லும்போது அழுத கண்ணும் வாடிய முகத்துடனும் போனான். அவன் வாய் திறந்து ஒன்றும் கூறாத முன்னமே 'இவன் சித்தார்த்தரைக் குறித்து ஏதோ துன்பமான செய்தி கொண்டு வருகிறான்' என்பதை அனைவரும் அறிந்து துயருற்றனர். அவன், அரசிளங்குமரர் மிக இளம் பருவத்தில் துறவு பூண்டு வெளியேறினார் என்று கூறியதும் தந்தை சுத்தோதனன் தலைமேல் கை வைத்துத் தரை மேல் வீழ்ந்து தனித்துயர் எய்தினான். சுத்தோதனன் கொண்ட துயரத்தைக் கண்ட சந்தகன் மேலும் ஒன்றும்கூற வாய் எழாமல் சிறிது நேரம் சும்மா இருந்தான். பிறகு நடந்ததை விவரமாகக் கூறிச் சித்தார்த்தர் தந்தைக்குக் கூறும்படி தெரிவித்தவைகளைச் சொல்லி அவர் தந்த ஆபரணங்களையும் அவிழ்த்து வைத்தான்.

ஆபரணங்களைக் கண்டதும் அரசன் பின்னும் வாய்விட்டுப் பலவாறு புலம்பி வருந்தினான். உடனே, அங்கிருந்த அமைச்சர் ஆறுதல் கூறி அரசனைத் தேற்றினர். அரசனும் மனம் ஆறுதல் அடைந்து அந்தப்புரம் சென்றான். மன்னன் அங்குச் செல்வதற்கு முன்னமே யசோதரை, கௌதமி முதலியோர் சித்தார்த்தரைக்

காணுமல் கவலையுற்றுக் கொண்டிருந்தனர். மன்னன் அவர்களைக் கண்டதும் அரசாளத் தோன்றிய பிள்ளை ஆண்டியானுன் என்று அலறி அழுதான் அதைக் கேட்ட யசோதரையும் கௌதமியும் துடி துடித்து வீழ்ந்து புரண்டு புலம்பி அழுதனர்.

யசோதரை, 'மெத்தென்ற பஞ்சணையில் படுக்கும் உங்கள் திருமேனி கல்லும் முள்ளும் நிறைந்த நாட்டில் வெறுந்தரையிலா படுக்கும்? ஐயோ, தங்கள் பசிவேளை அறிந்து யார் தங்களுக்குப் பணிந்து உணவு படைப்பார்கள்? அன்று நான் கண்ட கனவு மெய்யாயிற்றே. காதலரே, அன்பு மிகுந்த என்னை இப்படிப் பதறவிட்டுப் பிரிய எப்படி உங்கட்கு மனம் வந்ததோ' என்று பலவாறு பிரலாபித்தனள்.

கௌதமி ஒருவாறு மனந்தேறி யசோதரையின் அருகே சென்று, 'அம்மா அழவேண்டாம். குழந்தை பிறந்த நேரம் கொடுமையானது. யாரை நோவதில் என்ன பயன்? உன் உடம்பை வருத்தாதே. அதோ இருக்கும் நம் செல்வக் குழந்தையின் திருமுகத்தைக் கண்டு ஆற்றி இரு' என்று தேற்றினுள்.

தேற்றியும் யசோதரை கோள்வாய்ப்பட்ட மதியம் போல் பொலிவிழந்தனள். ஊணுறக்கமின்றித் துன்பக் கடலுள் ஆழ்ந்து துரும்புபோல் உடல் மெலிந்து தனித்திருந்து தத்தளிப்பாள் ஆயினள். இவ்வாறு வருஷங்கள் பல சென்றன.

ஒருநாள் சில இரத்தின வியாபாரிகள் அந்நகருக்கு வந்தனர். அவர்கள் சித்தார்த்தர் புத்தர் ஆனதையும் அவர் புகழ் எங்கும் பரவி வருவதையும் அரசனிடம்

விவரமாகக் கூறினார்கள். அப்போது யசோதரை அங்கு வந்து அவர்களைத் தம் நாயகன் சம்பந்தமாக அவர்கள் கண்டதை அப்படியே உரைக்குமாறு கேட்க, வியாபாரிகள், யசோதரை அம்மையாரை வணங்கி, 'தாயே, தங்கள் நாயகராகிய சித்தார்த்தர் தாம் அறிய வேண்டியவைகளை அறிந்துவிட்டார். அதனால் புத்த தேவர் ஆயினார். அவருடைய கொள்கைகளை அனைவரும் பின்பற்றி நடக்கின்றனர். மன்மதனை வென்றார். முத்திநெறியை எவர்க்கும் அளிக்கும் ஆற்றலையும் அடைந்தார். நாங்கள் அவரை நேரே கண்டு தரிசித்தோம், அவர் சொற்பொழிவையும் கேட்டோம். ஆங்காங்குச் சென்று இன்மொழி கூறி அரசரையும் மற்ற மக்களையும் தம் வழிப்படுத்திக் கொல்லாமையைப் பரப்பி வருகிறார். இங்கும் இன்னும் ஒரு வாரத்தில் வருவார். தாங்களும் கண்டு வணங்கி அவரிடம் நல்லுபதேசம் பெறலாம்' என்றனர். அவற்றையெல்லாம் கேட்ட யசோதரை மனம் குளிர்ந்து மகிழ்ந்து அந்த வணிகர்க்குப் பல பரிசுகளும் உடையும் நல்குமாறு விடையளித்தனுப்பினாள். அன்று முதல் யசோதரையும் சித்தார்த்தருடைய பெற்றோரும் அவர் வரவை எதிர் நோக்கினர். அவர்களுக்கு அந்த ஏழுநாளும் ஏழு யுகங்களாக இருந்தன.

அதனால் அரசன் விரைவில் அவரை அழைத்து வர அறிஞர் பலரை அனுப்பினான். அவ்வாறு சென்ற அறிஞர் அனைவரும் புத்தர் இருக்கும் இடந்தேடிச் சென்றடைந்தனர். புத்தர் அங்கே பலருக்கும் செய்து கொண்டிருந்த நல்லுபதேசங்களைக் கேட்டனர். கேட்டவுடன் தாங்கள் வந்த காரியத்தையும் மறந்து உள்ளம்

இளகி உண்மையாக உலகில் பற்று நீங்கிப் புத்தருக்கு அடிமையாகி அவர் அணுக்கத் தொண்டர் ஆயினர்.

அருமைப் புத்திரனை அழைத்து வருவதாகக் கூறி வந்த அறிஞர்களைக் காணமல் அரசன் மிக்க மனம் வருத்தம் அடைந்து உதாயி என்னும் மற்றொருவனை அனுப்பிப் புத்தர் இருக்குமிடம் அறிந்து சென்று அவரை அழைத்துவரச் செய்தார். அவன் உடனே புறப்பட்டுப் புத்தர் இருக்கும் இடத்தை அடைந்தான். அங்கே தனக்கு முன்னே அழைத்து வருவதாக வந்த அறிஞர் அடியராய் இருப்பதைக் கண்டான். அதனல் புத்தர் மாண்பை அறிந்தான் ஆயினும் தான் கருதி வந்த வேலையை முடித்த பிறகே வேறு செய்திகளைச் செவி ஏற்க வேண்டுமென்று காதில் பஞ்சைவைத்து அடைத்துக் கொண்டான். பிறகு, புத்தருக்குச் சமீபத்தில் நெருங்கி 'சுவாமி, தங்களைத் தந்தையார் விரைவில் அழைத்து வருமாறு ஆணையிட்டார்கள். அதனல் நான் இங்கு வந்தேன். தங்களைக் காண்பதற்காக இத்தனை ஆண்டுகளாக அவர் உயிர் தரித்திருக்கிருர். ஆகையால், தாங்கள் வந்து காணுவது கடமையாகும்' என்ருன். அதனைச் செவியேற்ற புத்தர் 'இன்னும் ஒரு வாரத்தில் யான் அங்கு வருவேன். இதனை என் பிதாவுக்கு அறிவிப்பாயாக' என்ருர்.

உடனே, உதாயி திரும்பி தன் நகர் வந்து அரசனுக்குத் தெரிவித்தான். சுத்தோதனன், மகன் விரைவில் வரவில்லையே என்று கவலைப் பட்டாலும், உதாயியிடம் ஒரு வாரத்தில் வருவதாகத் தன் புத்திரரே கூறி அனுப்பி இருப்பதனல் மனம் மகிழ்ந்து 'இந்நாட்டு இளவரசரும் இளமையில் துறந்து நாட்டின் நன்மைக்

காக உழைப்பவரும் தன்னலங் கருதாத தகைமையாள ருமாகிய எனது குமாரர் இன்னும் ஏழுநாளில் வரப் போவதால், நகர் முழுவதும் அலங்கரிக்குமாறு பறை யறைவிப்பாய்' என்று கட்டளையிட்டான். அவ்வாறே தெரிவித்தபின் நகர மாந்தர் யாவரும் அன்பு மேலீட் டால் வீதிகளைப் பந்தலிட்டும் தோரணம் கட்டியும் அலங்கரித்தனர். புதுமணல் பரப்பினர். வாழை, கரும்பு கமுகு முதலியவற்றைக் கட்டி அழகு செய்த னர். இவ்வாறு ஏழு நாட்களாகப் பலவிதமாக அலங் காரம் செய்தனர். ஏழாம்நாள் மன்னன் மந்திரிமார் புடை சூழக் குடிமக்கள் தொடர்ந்துவர நகர் கோட்டை வாயிலை வந்தடைந்தான். மேள வாத்தியங்கள் முழங்கின.

யசோதரையும் கணவன் வருகையை எதிர் நோக் கிய உள்ளத்தளாய்த் தன் மகனைக் கையில் எடுத்துக் கொண்டு மாடியில் ஏறி நின்று பார்த்துக் கொண்டிருந் தாள். கண் எட்டிய தூரம் பார்த்துப் பார்த்துப் பஞ் சடைந்தன. நகர மாந்தரும் 'வருகிறார், வருகிறார் இளவரசர்' என்று எங்கும் ஒலி செய்தனர். எங்கும் ஒரே ஆனந்தம் அன்று அந்நகர் தேவ லோகம் போல் காட்சி அளித்தது.

இவ்வாறிருக்கும் பொழுது பல அடியார்களுக்கு நடுவே, பல உடுக்களுக்கிடையே தோன்றும் மதியம்போல் புத்தர் வந்து கொண்டிருந்தார். பார்ப் பவர் அனைவரும் அதோ முண்டிதங் கொண்ட தலையும் பிக்ஷா பாத்திரம் தாங்கிய கையும் காவியுடை உடுத்த அரையும் உடையவராய், கருணையே வடிவமான கட்

டழகர் வருகிறார்" என்று பேசியும் கையால் சுட்டிக் காட்டியும் மகிழ்ந்தனர்.

சுத்தோதனன் 'நாம் பெற்ற பிள்ளை நமக்கு உதவவில்லை. அரச குலத்துப் பிறந்து ஆண்டியாய் இங்கு வந்து நம் குலத்திற்கும் பழியை உண்டாக்கும் இப் பிள்ளை இருந்தென்ன இறந்தென்ன? ஆகையால் இப்பொழுதே தலை விழும்படி துணித்துப் போடுகிறேன்' என்று கூறி வாளைக் கையில் எடுத்துச் சுழற்றிக்கொண்டு அடியார்களை விலக்கிக்கொண்டு நடுவே நுழைந்து புத்தர்க்கு அருகே அணைந்தான். அவரைக் கண்டான். புத்தருடைய தெய்வத் திருவருளால் மன்னன் மதி மயங்கியது. புத்தர் சுந்தரத் தோற்றத்தையும் அமுதமயமான வாக்கின் விரிவையும் கருணை நிறைந்த விழியையும் கண்டதும் கையிலிருந்த வாளும் கீழே விழுந்தது.

பிறகு மன்னன் புத்தரை நோக்கி 'என் ஐயனே, இதோ சுற்றி நிற்கிற குடிகளும் பெற்ற பாவியாகிய நானும் மனைவியும் மகனும் மற்றுமுள்ளோரும் அளவு கடந்த மனத்துயரில் ஆழ்ந்து வருந்த துறவி வேடங் கொள்ள எங்கே எப்போது கற்றனை? என் உயிர் துடிக்கிறதே. மகனில்லாது பெற்றெடுத்த மாணிக்கமே! இதற்குத்தானா உன்னைத் தவங்கிடந்து பெற்றேன்? உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆளுவாய் என்று எண்ணிய என் உள்ளத்தில் நெருப்பைக் கொட்டியதுபோல் ஆக்கினையே. அரச குலத்திலே பிறந்த நீ இக்கோலத்துடன் இருப்பதைக் கண்டும் என் உயிர் இன்னும் போகாமல் இருக்கிறதே. இனி, இந்த ராஜ்யத்தை எனக்குப் பின்னால் ஆள்பவர் யார்? இனியாவது என்

மனம் தேற மணிமுடி சூடி அரசாட்சியைப் பெறுவா யாக' என்றான்.

சுத்தோதனன் கூறியவைகளைப் பொறுமையுடன் கேட்ட புத்தர், 'தந்தையே, நான் பல காலங்களில் உலகில் அவதரித்து உலகத்தை நல்வழிப்படுத்திய புத்தர்களுடைய பரம்பரையைச் சேர்ந்தவன். அவர்களுடைய திருவுளப்படி உங்கள் புத்திரனாக அவதரித்தேன். உங்கள் புத்திர விருப்பத்தை நிறைவேற்றினேன். பிறகு அவருடைய விருப்பத்தின்படி அவர் ஆணையை மேற்கொண்டு நடக்கிறேன். முன்னே அவதரித்த புத்தர் எல்லோரும் துறவியாய்த் தாங் கண்டறிந்த உண்மைகளை மற்றவர்க்கு உபதேசித்து நல்வழிப் படுத்துவதே கடமையாய்க் கொண்டனர். நானும் அவ்வாறே செய்ய வேண்டும்.

"தாமின்புறு வதுலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தோர்."

என்றது தாங்கள் அறியாததா? உலகம் இன்பம் அடைவதே நான் அடையும் இன்பமாகும்' என மக்கள் யாவரும் கேட்குமாறு மன்னனுக்குக் கூறினார்.

சுத்தோதனன் மனம் மகன் இதோபதேசங்களைச் செவியேற்றதும் மாறியது. ஆதலால் அரசன் உடனே புத்தரைத் தனது அரண்மனைக்கு எழுந்தருளிச் செல்லுமாறு அழைத்தான். புத்தர் அதற்கு மனமிசைந்து எழுந்தருளினார். யசோதரை காதலர் வருகையைக் கண்டு ஓடிவந்து காலில் விழுந்து வணங்கி எழுந்து 'சுவாமி, அடியாள் தனித்திருந்து வருந்த தாங்கள் பிரிந்து துறவியானது என் விதிவசமே. அடியேனையும்

Q4:33
NS2

அப்பணியில் ஈடுபடுத்தி விடுங்கள்' என்று கூறி வருத்தத்தைத் தெரிவித்தாள். புத்தர் அவற்றைக் கேட்டவுடன், 'பெண்ணே, வருந்தாதே. எல்லாம் கடவுள் திருவருள்படி நடக்கும். நீ உன் மகன் பொருட்டு இங்கேயே இருக்கவேண்டும். நான் இந்த உலக நன்மையின் பொருட்டுத் துறவியாய்ப் போக வேண்டியவனே. இனிமேல் என்னைக் குறித்து வருந்துவதில் பயனில்லை' என்று தேற்றினர்.

சிலநாள் அரண்மனையிலிருந்து அப்பால் அந்நகரின் சமீபத்திலுள்ள ஒரு குன்றின்மேல் ஏறி நின்று மக்கள் அனைவருக்கும் கேட்கும்படி அரிய கருத்துக்கள் அடங்கிய சொற்பொழிவுகளைச் செய்தார். அவைகளைக் கேட்டதும் மன்னன் சுத்தோதனனும், மனைவி யசோதரையும், மகன் இராகுலனும் மற்றவரும் பௌத்த மதத்தை மேற்கொண்டு ஒழுகினர்.

கடமை வகுத்தது

பிறகு மக்களுடைய விருப்பப்படி பெற்றோர், மக்கள், ஆசிரியர், மாணாக்கர், மனைவிமார், நண்பர், தலைவன், வேலைக்காரர், துறவி ஆகிய அனைவருடைய கடமைகளையும் ஐயம் திரிபற எடுத்தோதுவாரானார். அவற்றுள் மாணாக்கர் கடமையை மட்டும் இங்கே கூறுவோம்.

ஆசிரியர் முன்னே சென்று நிற்றலும், அவர் சொல்லும் பணிகளை அன்போடு செய்தலும், ஆசிரியர்க்கு வணக்கம் செய்தலும், அவர் விரும்பியதை அளித்தலும், அவர் சொல்வதை மேற்கொண்டு நடத்தலும் மாணாக்கருடைய சிறந்த கடமைகள் என்பதாம்.

தேசிகர் முன்னிலை சென்று நிற்றலும்
அவர்பணி விடைகள் அன்பொடு புரிதலும்
வணக்கம் உறுதலும் வேண்டுதல் வழங்கலும்
உபதேசத்தைக் கடைப்பிடித் தொழுகலும்
சீடர்க் குற்ற செவ்விய கடனே.

இவ்வாறே ஒவ்வொருநாளும் ஆங்காங்குச் சென்று சொற்பொழிவு செய்து நன்னெறியில் மக்களை நடக்கச் செய்தனர். இவ்வாறே தம் மாணாக்கர் பலரையும் செய்யுமாறு செய்தார். எண்பது வயது வரையில் உலகுக்குத் தொண்டாற்றுவதிலேயே காலங்கழித்துத் தம் புகழை நிலைநாட்டி முடிவில் நிர்வாணம் எய்தினர்.

புத்தர் பரப்பிய மதக்கொள்கைகள் இன்றும் நமது தேசத்தில் இருந்து வருகிறது. அவர் கொள்கைகளுள் முக்கியமானவை தன்னடக்கம் தன்னைச் சீர்திருத்தம் செய்தல் ஆகிய இவை இரண்டுமேயாகும்.

புத்தருடைய சிறந்த கொள்கைகள்

1. மற்ற உயிர்களைத் தம் உயிர் போல் எண்ணி யாதொரு துன்பமும் செய்யாதிருத்தல்.

2. பிறர் பொருளை அவரறியா வண்ணம் அபகரிக்க எண்ணாமல் இருத்தல்.

3. பொய் பேசாமல் இருத்தல்.

4. ஐந்து பெரும் பாதகங்களில் ஒன்றாகிய மது உண்டலை நீக்குதல்.

5. தீய ஒழுக்கங்களில் எப்போதும் மறந்தும் நடக்காமல் இருத்தல் என்பவை.

6A
11.33